REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஒக்டோபர் 1 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 233 | October 01,Thursday, 2020 | 16 பக்கங்கள் | 30/-

ஒக்டோபர் 09 இல் பாடசாலைகளுக்கு விடுமுறை

இரண்டாம் தவணைக்காக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு ஒக்டோபர் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டாம் தவணை விடுமுறை அன்றைய தினம் முதல் ஆரம்பமாவதோடு மூன்றாம் தவணைக்காக 06

வரலாற்று பயணத்தில் மற்றுமொரு ஆரம்பம்...
நாளை முதல்

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்து கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முதன்மை அதிதியாக நேற்று கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம். நிகழ்வில் கலந்துகொண்ட சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் (பாபு சர்மா), கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இந்துக் கல்லூரியின் அதிபர் டி.பீ.பரமேஸ்வரன், ஆகியோரையும் படத்தில் காண்க.

சர்வதேச சிறுவர் தினம்; ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

பிள்ளைகளின் சிறு பராயத்தை மிகுந்த பொறுப்புடன் நெறிப்படுத்துவதன் மூலமே 'எமது தேசத்தை நாமே கட்டியெழுப்புவோம்' என்ற இவ்வருட உலக சிறுவர் தின கருப்பொருளை யதார்த்தமாக்க முடியுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சிறுவர் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. எமது சிறுவர்கள் எமது தேசத்தின் எதிர்காலச் சொத்துக்கள். அவர்களை அறிவு ரீதியாக வளப்படுத்தி திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது முழு சமூகத்தினதும் பொறுப்பாகும். பிள்ளைகளின் உள, உடல், 06

மாணவர்களின் கோரிக்கையை ஏற்று பாடசாலைகளை விரைவாக ஆரம்பித்தோம்

கொழும்பு இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொவிட் 19 அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பாடசாலையை கூடிய விரைவில் ஆரம்பிக்குமாறு மாணவர்கள் விடுத்த கோரிக்கையை, அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் தமக்கு நிறைவேற்ற முடிந்ததாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (30) தெரிவித்தார். கொழும்பு, இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்துக் கல்லூரியின் 2019ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு இதன்போது 06

நவ.17 இல் புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவு திட்டம்

புதிய அரசாங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இந்த வருட வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகை உள்நாட்டு உற்பத்தியில் 9 வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு உள்நாட்டு உற்பத்தியில் 4.5 வீதமாக அதனை பேண எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டார். நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாகவும் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு' அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைவதற்கு தேவையான யோசனைகள் இதனூடாக முன்வைக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த ஊடக மாநாட்டில் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

இங்கு மேலும் குறிப்பிடப்பட்டதாவது, கீழ் கண்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி இம்முறை வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கு விடயதானங்கள் வழங்கப்பட்டமைக்கு அமைவாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட வகையில் சம்பந்தப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

அனைவருக்கும் குடி நீரை வழங்குதல், முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் 1,00,000 கிலோ மீற்றர் வீதியை புனரமைத்தல் மற்றும் 06

பாதாள உலக குழுக்கள் பற்றிய தகவல்கள் வழங்கினால் பணப் பரிசு

இலங்கையில் செயற்படும் பாதாள உலக குழுவினரிடம் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் உட்பட பாரிய ஆயுதங்கள் உள்ளதாக புலனாய்வு பிரிவு உறுதி செய்துள்ளது.

பிரபுக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் கொலைகள் உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளும் நோக்கில் இவ்வாறான ஆயுதங்களை தம்வசம் வைத்துள்ளனர். இந்த ஆயுதங்களை பாதாள உலக குழுவினரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு மிகப் பெரிய அளவிலான பணப்பரிசு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள் 06

நீதி அமைச்சில் தொழில் பெற்று தருவதாக பலரிடம் நிதி மோசடி

சி.ஐ.டி விசாரணைகள் முன்னெடுப்பு

ஷம்ஸ் பாஹிம்

தொழில் வழங்குவதாக பணம் பெற்று ஏமாற்றும் மோசடி நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு நீதி அமைச்சு பொதுமக்களிடம் கோரியுள்ளது.தொழில் பெற்றுத் தருவதாக பணம்பெறும் நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு நீதி அமைச்சர் அலி சப்ரி பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சில் எழுதுவினைஞர், அலுவலக உதவியாளர்,சாரதி மற்றும் காவலாளி போன்ற பதவிகளுக்கு நேர்முக பரீட்சைக்கான கடிதம் மற்றும் நியமனக் கடிதம் 06

ராஜிதவுக்கு ஆஜராக மீண்டும் அழைப்பாணை

முன்னாள் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவை எதிர்வரும் 05 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு மீண்டும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவு கொமாண்டர் சுமித் ரணசிங்க 06

சர்வதேச நீதி கோரி நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம்

'எமக்கான நீதியை நாம் பெற ஏதுவாக இலங்கையை சர்வதேச நீதிமன்றிற்கு பாரப்படுத்து' வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இன்று (01) சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் காணாமல் போன தமது குழந்தைகளுக்கு நீதி கோரி இந்த கவனயீர்ப்பு போராட்டம் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக 06

கொழும்பில் தீப்பிடித்து எரிந்த மின்மாற்றி

கொழும்பு, ஆமர் வீதி பகுதியிலமைந்துள்ள மின்மாற்றியொன்று நேற்று பகல் 12.30 மணியளவில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீ விபத்தையடுத்து இப் பகுதிக்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மின்மாற்றி யில் 06

வெளிநாடுகளிலிருந்து மேலும் 339 பேர் நாடு திரும்பினர்

கொரோனா காரணமாக நாடு திரும்ப முடியாமல் மூன்று நாடுகளில் சிக்கியிருந்த 339 பேர் நேற்று அதிகாலை மத்தல விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர். அவுஸ்திரேலியாவின் 06

கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் முறையில் மாற்றம்

நாட்டில் ஆபத்தான கட்டடங்களை அடையாளம் காண்பதற்கும், புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டடங்களுக்கு அனுமதியை வழங்குவதற்கும், புதிய திட்டம் ஒன்றை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் முதற்கட்டமாக, கட்டடங்கள் 06



கடந்த தேர்தல்ல பணம் கொடுக்காததாலதான் யூ. என். பி தோற்றதாக வடக்கில அம்மணி கூறியிருக்கிறா.....
அப்ப இவ்வளவு காலமும் பணம் கொடுத்துத் தான் வெற்றி பெற்றிருக்கினம் போல...

இரு துண்டுகளான கைகளை பொருத்தி யாழ்ப்பாணத்தில் வைத்தியர்கள் சாதனை

வடமாகாணத்தில் முதல்முறையாக ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் கடந்த 23 ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நபர் தற்போது முழுமையான சிகிச்சைகள் அழிக்கப்பட்டு கை மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் இளஞ்செழியன் பல்லவன் தலைமையிலான குழுவினர், முழுமையான பங்களிப்பை வழங்கியதற்கு பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் 06

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை தாக்கிய சம்பவம்;

சுமணரத்ன தேரருக்கு பிணை; நவம்பர் 27 ஆஜராக உத்தரவு

மட்டக்களப்பு பண்டாரவெளி பிரதேசத்தில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை தாக்கிய சம்பவம் தொடர்பாக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் நேற்று (30) மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராம விகாரை விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தன தேரர் உட்பட 03 பேர் ஆஜராகினர்.

அவர்களை 02 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் 06

விசர் நாய் கடித்து மாணவன் உட்பட இருவர் பரிதாப பலி

காலி கராப்பிட்டிய பகுதியில் கடந்த மூன்று தினங்களில் இருவர் விசர் நாய் கடிக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் பதின்மூன்று வயது மாணவன் உட்பட இரண்டு பேர் உயிரிழந்ததாக உடுகம ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் சுசந்தா பெர்னாண்டோ தெரிவித்தார். இதேவேளை 06

பம்பலப்பிட்டி இந்துவின் பரிசளிப்பு விழா

01ம் திகதி முதல் 02ம் திகதி வரை

தொழுகை நேரம்

சுபஹ்	04.43
லுஹர்	12.02
அஸர்	03.16
மஃரிப்	06.03
இஷா	07.12

2020 ஒக்டோபர் 1 வியாழக்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் புரட்டாசி 15

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்த யோகம்
நட்சத்திரம்: உத்திரட்டாதி முழுவதும் 0.00
திதி: பவுர்ணமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

குவைத் மன்னர் அமீர் ஷேக் சபா அல் அஹ்மத் காலமானார்

உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த குவைத் மன்னன் அமீர் ஷேக் சபா அல் அஹ்மத் (91) நேற்று காலமானார்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் குவைத் மன்னராக உள்ளவர் அமீர் ஷேக் சபா அல் அஹ்மத் (வயது 91). தந்தையின் மறைவுக்குப் பின் நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பை நிர்வகித்து வந்த நிலையில் இவர் வயது (91) முதிர்வு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். கடந்த ஜூலை 18ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக அமெரிக்காவுக்கு ஜூலை 23ஆம் தேதி அழைத்து செல்லப்பட்டார். அவரது சிகிச்சை விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. அவருக்கு பதிலாக, குவைத் பட்டத்து இளவரசர் ஷேக் நவாப் அல் அகமது சபா(83), தற்காலிக மன்னர் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மன்னர் அமீர் ஷேக் சபா அல் அஹ்மத் நேற்று (30) காலமானார்.

மன்னர் இறப்பை அடுத்து, குவைத்தில் 03 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் எனவும், கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் எனவும் அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கொவிட் 19 எதிர்கொண்டமை 05 ஆசியான் நாடுகளின் தூதுவர்கள் பாராட்டு

இலங்கையில் கொவிட் 19 தொற்றுநோயை வெற்றிகரமாக எதிர்கொண்டமை தொடர்பில் 05 ஆசியான் (தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு) நாடுகளின் தூதுவர்கள் அரசாங்கத்தை பாராட்டியுள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுடன் (29) பாராளுமன்றத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது கொவிட் 19ஐ கட்டுப்படுத்துவதில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில் பாராட்டப்பட்டது. முறையான திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் கொவிட் 19ஐ முறியடித்த நாடுகளில் இலங்கை முன்னணியில்

06

நாணயமாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	120.37	126.14
கனடியன் டொலர்	132.20	138.18
யூரோ	201.26	209.00
ஜப்பான் யென்	1.6887	1.7628
சிங்கப்பூர் டொலர்	128.46	133.83
ஸ்டேலிங் பவுன்ஸ்	224.45	232.40
சுவிஸ் பிராங்க்	187.86	195.81
அமெரிக்க டொலர்	183.51	188.61

மத்திய கிழக்கு	குறித்த விலை
பஹ்ரின் டினார்	492.89
குவைத் டினார்	603.09
ஓமான் ரியால்	483.42
கட்டார் ரியால்	50.73
சவூதி ரியால்	49.54
ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	50.66

பாவனைக்கு உகந்த அரிசி விலங்குணவுக்காக பதுக்கல்

ஜாஎலயில் நுகர்வோர் அதிகார சபை கண்டுபிடிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

விலங்குகளின் உணவிற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான 300 மெற்றிக் தொன் அரிசியை நுகர்வோர் அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

பாவனைக்கு உகந்த மேற்படி 300 மெற்றிக் தொன் அரிசியை விலங்குகளின் உணவிற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிகார சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஜாஎல பகுதி விலங்குணவு உற்பத்தி நிறுவமொன்றிலிருந்து அதனைக் கைப்பற்றியுள்ளதாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்கமைய அவரது பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே பாவனைக்கு உகந்த நிலையிலுள்ள 300 மெற்றிக்தொன் அரிசி கைப்பற்றப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

விலங்குகள் உணவு உற்பத்தி நிறுவனங்களின் மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய செயற்பாடுகளால் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாகவும், எத்தகைய பொறுப்புணர்வுமின்றி பாவனைக்குகந்த அரிசியை விலங்கு உணவுக்காக உபயோகிப்பது குற்றமாகும்.

அது தொடர்பில் கடந்த ஜூலை 22ஆம் திகதி வர்த்தமானியொன்றும் வெளியிடப்பட்டிருந்தது என்றும் எனினும் அந்த வர்த்தமானி உத்தரவை உதாசீனம் செய்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதற்கிணங்க மேற்படி விலங்கு உணவு உற்பத்தி நிறுவனம் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளவும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்டுள்ள 300 மெற்றிக்தொன் அரிசியை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.(ஸ)

சர்வதேச சிறுவர் தினம்;

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்று எழுச்சிப் பேரணிகள் நடத்த திட்டம்

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, தமிழர் தாயத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணியும், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மகஜர் கையளிக்கவுள்ளதாக வடக்கு,கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினர் தெரிவித்தனர்.

யாழ்.ஊடக மன்றத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் உறவுகளுக்கான நீதி வேண்டி, அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று முதலாம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக நிறைவு செய்யப்படவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண்டியும், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும், சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட உறவுகளுடன் கொண்டு செல்லப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே? இராணுவத்தினராலும், துணை இராணுவ குழுக்களினாலும் கொண்டு செல்லப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே? என கோரி இந்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, உள்ளக விசாரணையை நிராகரிக்கின்றோம். சர்வதேச விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலப்பு பொறிமுறை கண்துடைப்பு போன்ற கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்,

06

இணைய ஊடகவியலாளர் நேற்று பிணையில் விடுதலை

ஞாயிறு தினத்தில் CIDயில் ஆஜராக பணிப்பு

நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக செய்தியொன்றை பிரசுரித்ததாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இணைய ஊடகவியலாளர் டெஸ்மன் சதுரங்க டி அல்விஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் மொஹமட் மிஹாரினால் இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும் மற்றும் 05 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப்

06

கடந்த அரசில் செலுத்த வேண்டிய 22,600 கோடி மீள செலுத்தப்பட்டது

கடந்த அரசில் செலுத்த வேண்டிய 24,200 கோடி ரூபாவில் 22,600 கோடி ரூபா இது வரை மீளச் செலுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒப்பந்தக்காரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை நீண்டகாலமாக செலுத்தப்படாததால் நிர்மாணத் துறை உட்பட பல்வேறு துறைகள் தடைப்பட்டிருந்ததாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், ஒப்பந்தக்காரர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் வழங்கப்படாதிருந்த தொகையை மீள வழங்கியதால் அவர்களின் கைகளில் பணம் பரிமாறப்பட ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் பொருளாதார புத்தெழுச்சி ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் அரச விநியோகத்திற்காக நிதி செலுத்தப்படாமையினால் எழுந்து நிற்க முடியாதிருந்த ஒப்பந்தக்காரர்கள் அரசுக்கு தமது நன்றியை தெரிவித்துள்ளனர் .

இதன் படி கடந்த திங்கட்கிழமையாகும் போது செலுத்த வேண்டிய தொகையில் 226 பில்லியன் மீள செலுத்தப்பட்டுள்ளது என்றார்.(பா)

குளிர்காலம் ஆரம்பம்; கோவிட் பரவல் தீவிரமடையலாம்

- உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை
- விமான நிலையம் திறப்பு உடனடி சாத்தியமில்லை

சுப்ரமணியம் நிஷாந்தன்

குளிர்காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் கொவிட் 19 வைரஸ் பரவல் தீவிரமடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் விமான நிலையத்தை மீள திறப்பது குறித்து உறுதியான தினமொன்றை கூறமுடியாதென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். சுகாதார துறையினரும் கொவிட் 19 ஒழிப்பு செயலணியும் விமான நிலையத்தை திறப்பதற்கான சிபாரிசுகளை வழங்கினால் மாத்திரமே விமான நிலையம் மீள திறக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் மொஹமட் அஸ்ரப் ஹய்தாரியுடன நடத்திய விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானிடையே சுற்றுலா மற்றும் முதலீடுகளை விரிவாக்குவது குறித்து இதன்போது இருவரும் ஆழமாக கலந்துரையாடியுள்ளனர்.

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்பத்த சமகால ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் செயற்பட்ட விதத்தை வரவேற்பதாகவும் சுற்றுலாப் பயணிகளுக்கான தடைகள் நீக்கப்படும் போது அதிகளவான

06

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள்;

சந்தேகநபர் ரியாஜ் பதியுதீன் விடுதலை

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீனின் இளைய சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஐந்து மாதங்களுக்குப் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பான விசாரணைகள்

06

தமிழகத்தில் ஒக். 31 வரை பொது முடக்கம் தொடரும்

பாடசாலைகள், சினிமா கிடையாது

தமிழகத்தில் எதிர்வரும் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை பொது முடக்கம் நீட்டிப்பு செய்யப்படுவதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்துள்ளார். பாடசாலைகள், புறநகர் ரயில் சேவைகள், சினிமா அரங்குகள் தொடர்ந்தும் மூடப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்து வருகிறது.

பல்வேறு தினங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், பல்வேறு தினங்களில் மாவட்ட ஆட்சியர்களின் காணொலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் நேற்று 30 ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது. எனினும், பொது மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும், பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், 29ஆம் திகதி நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கனவே நடைமுறையிலுள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது என்றும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புறநகர் ரெயில் சேவைக்கு அனுமதி இல்லை. பாடசாலைகள், கல்லூரிகள் திறக்க அனுமதி இல்லை. சினிமா அரங்குகள் திறக்க அனுமதி இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை அனுமதி அட்டை

காரைதீவு குறூப் நிருபர்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்க்காக இம்முறை அனுமதிஅட்டை (Admission Card) முதன்முறையாக பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படவிருக்கிறது.

இந்த அனுமதி அட்டையில் பரீட்சை எண் மற்றும் விண்ணப்பதாரி பரீட்சை எழுத வேண்டிய பரீட்சை நிலையம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரைகாலமும் அப்படியான அனுமதிஅட்டை க.பொ.த. சா.தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு மாத்திரமே பாடசாலை மாணவர்க்கு வழங்கப்பட்டுவந்தது. தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்க்கு இதுவரை அனுமதி அட்டை முறைமை அமுலில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டை பரீட்சைக்கு முகங்கொடுக்கும் போது கொண்டு வருவது கட்டாயம் அல்ல. ஒரு விண்ணப்பதாரி பரீட்சை அனுமதி அட்டையை காண்பிக்கா தவிடத்து பாடசாலை மூலம் வழங்கப்படும் வருகை ஆவணத்தை கொண்டு பரீட்சகரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சை எழுத அனுமதிக்கப்படும். மேற்படி பரீட்சை 2020 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பகுதி – 1 மு.ப. 09.30 – 10.30 மணிவரையும் பகுதி– 2 11.00 – 12.15மணி வரையும் நடைபெறும். இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பரீட்சை அனுமதி அட்டை மற்றும் வரவு ஆவணம் என்பன உரிய பாடசாலை அதிபர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி அட்டவணை மற்றும் வரவு ஆவணம் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் பரீட்சைத் திணைக்களத்தை தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தேசிய மாணவர் அடையாளக்குறியீடு அறிமுகம்.

06

தனிமைப்படுத்தல் நிலையங்களில் ஏழாயிரம் பேர்

நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் 07 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 343 பேர் நேற்று (30) விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, 46 ஆயிரத்து 673 பேர் இதுவரையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் முப்படையினரால்

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 13

குறள் தரும் சிந்தனை

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு

குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு,
உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும்.
அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும்.

பெருந்தோட்ட மக்கள் வாழ்வில் சுபிட்சத்துக்கான நடவடிக்கை

இலங்கையின் மலையகத்தில் வாழ்கின்ற பெருந்தோட்ட மக்களின் வீடில்லாப் பிரச்சினை பல தசாப்தங்களாக நீடித்து வரும் ஒரு முக்கிய விவகாரமாக உள்ளது. இது முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய மனிதாபிமான பிரச்சினை. அந்த வகையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணவென கடந்த காலங்களில் பலவித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த மக்களின் வீடில்லாப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. லயன் அறை வாழ்வே தொடர்கதையாக நீடித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான நிலையில் பெருந்தோட்ட மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் வகையில் இந்திய அரசாங்கம் 4,000 வீடுகளை 2016இல் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இருந்தும் அவற்றில் 669 வீடுகள் மாத்திரமே கடந்த நான்கு வருட காலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதன்படி 3,331 வீடுகள் இற்றை வரையிலும் நிர்மாணிக்கப்படாதுள்ளன.

இந்த விடயம் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரியவந்திருக்கிறது. இது பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது.

இந்திய அரசாங்கம் பெருந்தோட்ட மக்களுக்காக வழங்கிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு தாமதங்கள் ஏற்பட உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஏற்பட்ட சிக்கல்களே காரணமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் சிக்கல்கள் உள்ளன என்ற விவகாரத்தை வைத்துக் கொண்டு 3,331 வீடுகளை நிர்மாணிக்காது நான்கு வருடங்களாகத் தாமதப்படுத்தி இருக்கும் விடயத்தை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதில் தாமதங்கள் தடங்கல்கள் ஏற்படுகின்றன எனில், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்று இவ்விடயத்திற்கு தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

அதேவேளை, கடந்த ஆட்சியில் பங்காளர்களாக இருந்த மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இருக்க வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

இதன் விளைவாக இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் பெருந்தோட்ட மக்களின் லயன் அறை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கிடைத்த சந்தர்ப்பமும் கடந்த ஆட்சிக் காலத்தில் இழுத்தடிக்கப்பட்டு தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் விமோசனத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில்தான் இந்திய அரசாங்கம் இவ்வீட்டுத் திட்டத்தை வழங்கி இருக்கிறது. இருந்தும் நான்கு வருட காலப் பகுதியில் இத்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையானது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான நிலையில்தான் இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி, 'பெருந்தோட்ட மக்கள் வசிக்கும் லயன் வீடுகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை அண்டிய பிரதேசங்களிலேயே வீடுகளை அமைத்தால் அதன் பிரதிபலன்களை அம்மக்களால் விரைவாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதனால் அவர்கள் வாழும் பிரதேசத்திலேயே அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டதோடு, வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கவும், நிர்மாணப் பணிகளை தரம் வாய்ந்தவையாக மேற்கொள்வதற்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ஜனாதிபதியின் இந்நடவடிக்கை பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். அதேநேரம், லயன் அறைகளில் வாழ்ந்து வரும் மக்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இந்த உத்தரவு ஏற்படுத்தி இருக்கிறது. உண்மையில் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றப்பட வேண்டும். அவர்களது லயன் அறை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அதற்கு இந்த வீடமைப்புத் திட்டம் பெரும் உதவியாக இருக்கும். அத்தோடு இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு இணையாக தனியார் தோட்ட நிறுவனங்களும் தம் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றவும் தவறக் கூடாது. இவை பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் சுபீட்சத்திற்கு வழிவகுக்கும்.

ஆகவே பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளித்து கட்சி அரசியல் பேதங்களுக்கப்பால் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

நேத்ரா தொலைக்காட்சியில் இன்று நோன்மதி தின கலந்துரையாடல்கள்

வண. பௌத்த தேரருடன் தமிழில் கலந்துரையாடல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்ரா தொலைக்காட்சியில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ்மொழியில் ஒளிபரப்பாகி வருகிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் வழங்கும் நோக்கிலேயே இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது.நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக நேத்ரா தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சி இடம்பெற்று வருகிறது. சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2019 நவம்பர் மாதம் 16ம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மத நல்லிணக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓகஸ்ட் 5ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. அதன் பின்னர் மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ், புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும். ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகு நடையில் விளக்கங்கள் வழங்கும் போது இன நல்லிணக்கம் ஏற்படுகிறது. மேலும் மதங்கள் பற்றிய பல அநாவசிய சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன.

பௌர்ணமி தினத்தின் வரலாற்றுச் சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்ச சீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்க்கைச் சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த பிக்கு மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

புத்த சாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்து கொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இன்று ஒக்டோபர் 1ம் திகதி அதிவப் நோன்மதி தினத்தன்றும் விசேட ஒளிபரப்பு இடம்பெறுகின்றது. எசல நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு, பௌத்த தர்மம் , புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை இரத்மலானை விமலா ராமயவைச் சேர்ந்த சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தர்மர் அரவணடிகள் வழங்குவார் என்பதும் சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்ச்சியை தொகுத்தளிப்பவர் சந்திரசேகர். இன்றைய தினம் காலை 9 மணி முதல் 11.30 வரை ஒரு பகுதி கலந்துரையாடலும் பௌத்த தேரருடனான விசேட உரையாடல் இன்றைய தினம் மாலை வேளையில் இடம்பெற உள்ளது.

சிறார்களை நற்பிரஜைகளாக்குவதில் எதிர்நோக்கப்படும் சவால்கள் ஏராளம்

சர்வதேச சிறுவர் தினம் இன்று

உலக மகாயுத்தத்தின் பின்னர் தோன்றிய நெருக்கடி நிலையில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் 1956ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயம் உருவாக்கப்பட்டு அதில் பல்வேறு நாடுகள் உடன்படிக்கை செய்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் 1991ம் ஆண்டு இலங்கையும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு 1992ம் ஆண்டு சிறுவர் உரிமை சாசனத்தை இலங்கையில் வெளியிட்டது.

அன்றிலிருந்து எமது நாட்டின் கலாசார ஒழுக்கவிழுமியங்கள், அடையாளங்கள், மதங்கள் போன்றவற்றைப் பேணி எமது நாடு சிறுவர் சமுதாயத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்றது. எவ்வாறாக இருப்பினும் சிறுவர்கள் மீதான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இதற்குக் காரணம் சிறுவர்களுக்கு அவர்களது உரிமைகளை சரியாக பெற்றுக் கொடுக்காமையும், பெற்றோர் பாதுகாவலரின் பொறுப்பற்ற தன்மையும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இன்றைய காலகட்டத்தில் சிறுவர்கள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்று பாடசாலை கல்வியை தொடர்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினையாகும்.18 வயது வரை கட்டாயக் கல்வியைப் பெற வேண்டும் என்று கூறப்பட்டாலும், இடைநிலை வகுப்புகளில் அதிகமானோர் இடைவிலகுகின்றனர். சிறுவர் உரிமைகள் சாசனத்தில் உறுப்புரை 28 மற்றும் 29 களில் ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியைப் பெற உரிமையுண்டு எனக் கூறப்பட்டாலும், இது சவால்மிக்க ஒன்றாக மாறியுள்ளது. பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் பரிமாற்றம் மற்றும் விற்பனையும் பெரும் சவாலாக மாறியுள்ளது. சிறுவர்கள் எதற்கும் இலகுவில் வசியப்பட்டு அடிமையாக கூடியவர்கள் என்பதை சமூகவிரோதிகள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

சிறுவர் உரிமைகள் சாசனத்தின் 33 மற்றும் 34வது உறுப்புரைகள் போதைப்பொருள் பாவனை பரிவர்த்தனை என்பவற்றில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு விதந்துரைக்கின்ற போதிலும் அவர்களை அவற்றுக்கு அடிமையாக்கும் முயற்சிகள் தொடரவே செய்கின்றன.

போதைப்பொருள் பாவனைக்கு ஈடாக இன்று சிறுவர்களை ஆட்கொண்டு இருக்கும் மற்றுமொரு பிரச்சினை இணையவழி மூலமான விளையாட்டுக்கள் ஆகும். இவ்விளையாட்டுகளுக்கு மாணவர்கள் அடிமையாகி தமது எதிர்காலத்தை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். கைத்தொழில் புரட்சியின் பின்னரான தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சி காரணமாக உலகம் உள்ளங்கைக்குள் வந்துள்ளது. இதன் காரணமாக இன்றைய தலைமுறையினர் .அதிக ஒழுக்கக்கேட்டுக்கு உட்பட்டுள்ளனர். கொவிட் 19 காலப் பகுதியில் இணையவழி மூலமான கற்றல் செயற்பாடுகளுக்கு பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கு கைப்பேசிகளை கொடுத்தமையினால் இந்நிலை இன்னும் அதிகரித்துள்ளது.

இன்றைய சிறுவர்களிடையே காணப்படும் மற்றுமொரு பிரச்சினை போசாக்குக் குறைவு ஆகும். பாடசாலைக்கு அதிகாலை வேளையில் செல்வதாலும் போக்குவரத்து மற்றும் பாதைப் பிரச்சினையாலும் பிள்ளைகள் நேரகாலத்தோடு பாடசாலைக்குச் செல்கின்றனர். இதனால் காலை உணவை பெரும்பாலும் தவிர்க்கின்றனர். இல்லாது விட்டால் உடனடி உணவுகளையும் பேக்கரி உணவுகளையும் உட்கொள்கின்றனர். இதனால் உரிய போசணைக் கூறுகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இது மட்டுமன்றி மேலதிக வகுப்புக்கள் மற்றும் தனியார் வகுப்புக்கள் போன்றவற்றுக்கு பாடசாலை முடிந்து வருகை தந்து அவசர அவசரமாக செல்வதால் உணவை மறக்கின்றனர். இதனால் இரும்புச் சத்து குறைவு மற்றும் அயடீன் குறைபாட்டிற்கு உள்ளாகின்றனர்..

உடலுக்குத் தேவையான இரும்புச் சத்து உரிய அளவில் கிடைக்காததால் பாடங்களில் அவதானக் குறைவு, ஞாபக சக்திக் குறைவு, சோம்பல் மற்றும் சுறுசுறுப்பற்ற தன்மையும் ஏற்படுகின்றது.

இதை விட நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக காணப்படுவதால் இலகுவாக நோய்த் தொற்றுக்கும் ஆளாகின்றனர். குழந்தைகளுக்கு தினசரி கிடைக்கும் அயடின் கிடைக்காமையால் சோம்பல், புத்திக்கூர்மையின்மை, கண்டக்கழலை ஏற்படுகின்றன. இதை விட சாதாரண தனிநபர் ஒருவருக்கு தினமும் தேவைப்படும் அயடின் அளவானது ஒரு குண்டூசியின் தலையளவாகும். இதை பெற்றுக் கொள்ளாவிடின் மனித உடலுக்கும் மூளை விருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கும் தேவையான தைரொக்சின் ஹோமோன் உருவாக்கம் குறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதை விட கீரை வகைகள், பழங்கள் மற்றும் மரக்கறிகளை உண்ணாமையினால் அதிகமான சிறுவர்கள் விற்றமின் A குறைபாட்டிற்கு உள்ளாகின்றனர். ஓடி ஆடி விளையாட நேரமின்மையால் அதிக உடற்பருமன் காரணமாக நீரிழிவு, சிறுநீரக நோய் போன்றவற்றுக்கும் உள்ளாகின்றனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை போன்றவற்றால் இன்று பாடசாலைக் கல்வியை இடைவிட்டு தொழில் புரியக் கூடிய நிலையை அதிக சிறுவர்கள் விரும்பி ஏற்கின்றனர். கல்வியில் நாட்டம் இல்லாததன் காரணமாக இன்றைய சிறுவர்கள் பலர் சீர்கெட்டுச் செல்கின்றனர். பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை அரசாங்கம் இலவசக் கல்வியை வழங்கிய போதிலும், 18 வயது வரை பாடசாலைக் கல்வியை பெறுதல் என்பது சவாலாகக் காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு கல்வி, பொருளாதாரம், சுகாதார மேம்பாடு போன்றவற்றில் சிறுவர்கள் பின்தங்கி இருப்பதன் காரணமாக அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது இதற்காக எமது நாடு பல்வேறு திட்டங்களையும் முன்னெடுப்புகளையும் மேற்கொண்டுள்ளது. அதில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

கர்ப்பிணித் தாய்மாருக்காக 10 மாதங்களுக்கும் ரூபா 20000 பெறுமதியான போசாக்கு உணவு முத்திரை (உத்தம பூஜா) திட்டம், முன்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு பிள்ளைக்கு ரூபா 30 பெறுமதியான சத்தான காலை உணவு வழங்கல், 5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு மாதாந்தம் நிறை எடுப்பின் போது திரிபோஷ வழங்கல், ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 35 பெறுமதியான காலை உணவு வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு உடல் திணிவு சுட்டி எடுத்தலும் அயன் மற்றும் கல்சியம் மாத்திரை வழங்கலும், பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை நிறுவுதல், சுரக்சா காப்புறுதி திட்டம், அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டம், கிராமங்கள் தோறும் கிராமிய சிறுவர் கண்காணிப்பு குழுக்களை நிறுவி சிறுவர்களை பாதுகாத்தல், சமுர்த்தி திட்டம் மூலம் வறுமையை ஒழித்தல், நஞ்சற்ற உணவு உற்பத்தி ஊக்குவிப்பு, விஷேட செயலணி மூலம் போதைப் பொருள் ஒழிப்பு, சிறுநீரக பாதிப்பை குறைக்க சுத்தமான குடிநீர் வழங்கல்.

இலங்கை அரசாங்கம் இவ்வாறு சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கைச்சாத்திட்டதன் காரணமாக பல்வேறு விடயங்களை காலாகாலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஆகையால் பெற்றோர் தமது பிள்ளைகள் விடயத்தில் அதிக அக்கறை எடுத்து சிறுவர்களை மிகவும் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏ.எம்.கஸ்பியா வீவி...
(சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், பிரதேச செயலகம், கல்முனை)

அத்வானி உள்ளிட்ட அனைவரும் விடுதலை

பாபர் மசூதி வழக்கில் நேற்று பரபரப்பு தீர்ப்பு

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் 1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பா.ஜ.க மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்ட 32 பேரும் விடுதலை செய்யப்படுவதாக லக்னோ சி.பி.ஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுரேந்திரகுமார் யாதவ் நேற்று அதிரடியாகத் தீர்ப்பளித்தார்.

1992 டிசம்பர் 6ம் திகதி 450 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பாபர் மசூதி இடிக்கப்பட்டது. பாபர் மசூதி இடிப்பு விவகாரத்தால்தான் இந்தியாவில் மதமோதல்கள் வெடித்தன.

இந்த பாபர் மசூதி இடிப்பு குற்றவியல் வழக்குகள் 1993ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. 2001இல் அத்வானி உள்ளிட்டோர் ரேபரேலி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் 2010இல் அலகாபாத் உயர்நீதிமன்றம் இத்தீர்ப்பை உறுதி செய்தது.இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு வழக்கில் 2017இல், லக்னோ சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் மீண்டும் விசாரித்து தீர்ப்பளிக்க உத்தரவிட்டது. பல்வேறு காலஅவகாசங்களுக்குப் பின்னர் இந்த வழக்கு தீர்ப்பு கட்டத்தை எட்டியது.லக்னோ சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கில் நேற்று நீதிபதி சுரேந்திரகுமார் யாதவ் தீர்ப்பு வழங்கினார். 28 ஆண்டுகள் நடைபெற்று வந்த இந்த வழக்கின் தீர்ப்பை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.மொத்தம் 49 பேர் மீது பாபர் மசூதி இடிப்பு வழக்கு தொடரப்பட்டது. இதில் 17 பேர் விசாரணைக் காலத்திலேயே காலமாகி விட்டனர். இதனால் மொத்தம் 32 பேர் மீது மட்டும் வழக்கு விசாரணை நடைபெற்றது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட நிலையில் மரணம் அடைந்தவர்களில் மிக முக்கியமானவர்கள் பால்தாக்கரே, அசோக் சிங்கால், கிரிராஜ் கிஷோர், டால்மியா உள்ளிட்டோர். இவ்வழக்கில் மொத்தம் 351 சாட்சிகள், 600 ஆவணங்களை சி.பி.ஐ தாக்கல் செய்திருக்கிறது.

நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் அத்வானி உள்ளிட்ட 32 பேரையும் விடுதலை செய்வதாக நீதிபதி சுரேந்திரகுமார் யாதவ் தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பை நாடு முழுவதும் வரவேற்று பா.ஜ.க மற்றும் இந்துத்துவா அமைப்பினர் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இன்றைய இளையோரே நாளைய முதியோர்:

சர்வதேச முதியோர் தினம் இன்று

முதுமையை போற்றுவோம்!

மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆண்டுதோறும் ஒக்டோபர் 1ம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. 1990ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கமையவே இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதன் முதலாக 1991ம் ஆண்டு சர்வதேச முதியோர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலகெங்கும் வாழும் முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள்குறித்து ஆராய்வதும், அவர்களுக்கென ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதுமே இந்த நாளின் பிரதான நோக்கமாகும். ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் இத்தினத்தை தேசிய விடுமுறை தினமாக அனுஷ்டிக்கின்றன. ஜப்பானில் மூத்தோருக்கு கௌரவம் செலுத்தும் தினமாக இது அனுஷ்டிக்கப்படுகின்றது.

முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்கமுடியாத நிலையாகும். வாழ்நாள் எதிர்பார்ப்பு என்பது ஒரு உயிரினத்தின் சராசரி வாழும் காலத்தைக் குறிக்கும். சத்துணவு, நலவாழ்வு, மருத்துவம் ஆகிவற்றிலேயே வாழ்நாள் எதிர்பார்ப்பு பெரும்பாலும் தங்கி இருக்கிறது.இத்தகைய சூழலைப் பொறுத்து ஒரு மனிதனுக்கு சராசரி ஆயுட்காலம் 81 வருடங்களாக கணிப்பிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு இந்த கணிப்பீடு வேறுபடலாம்.

ஐ.நாவின் கணிப்பீட்டின்படி தற்போது உலகில் ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒருவர் என்றடிப்படையில் அறுபது அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள் காணப்படுகின்றனர். இது 2050ம் ஆண்டில் 5க்கு ஒன்று என்றடிப்படையிலும் 2150இல் 3 இற்கு ஒன்று என்றடிப்படையிலும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உலகலாவிய ரீதியாக 2050ம் ஆண்டளவில் முதியோரின் எண்ணிக்கை 200 கோடியாக அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. கடந்த காலங்களில் உலக அளவில் பிறப்பு மற்றும் இறப்பு வீதம் குறைந்து வருவது இதற்கு அடிப்படை காரணமாகக் கூறப்படுகின்றது.

முதியோர் தினத்தை உலகமே அனுஷ்டிக்கின்ற இச்சூழ்நிலையில் எமது முதிய பெற்றோர் பற்றியும் சிந்திக்க வேண்டிய கட்டாயப்பாட்டில் நாம் உள்ளோம். எம்மை வளர்த்து ஆளாக்கியவர்கள் தமது வாழ்நாளில் பல்வேறுபட்ட தியாகங்களைப் புரிந்து எம்மை இந்நிலைக்கு கொண்டு வந்துள்ளனர். நவீன உலகமயமாக்கல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே எமது வாழ்க்கைத் திட்டத்தை ஒழுங்குபடுத்தி கொண்டு வருவதனால் எமது பெற்றோரை பராமரிக்க எமக்கு காலஅவகாசம் கிடைப்பதில்லை. அண்மைக் கால ஆய்வுகளின்படி கடந்த ஒரு தசாப்தத்துக்கு இடைப்பட்ட காலத்தில் முதியோர் இல்லங்களில் தமது பெற்றோரை சேர்த்து விடும் நிலை அதிகரித்து வருவதாக புள்ளிவிபரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இந்த நிலையை நாம் ஆத்மார்த்த வாக்குமூலங்களாக இதயங்களில் பதிவாக்கி சிந்திக்க வேண்டும். பெற்றோருக்கு மதிப்பு தர வேண்டுமென்பது நம் எல்லோருடைய கலாசாரத்திலும் ஊறிப்போன விஷயம் என்றாலும், தற்போதுள்ள சூழலில் பெற்றோருக்குரிய மதிப்புகள் குறைந்து கொண்டே வருகிறதென்பது வருத்தமளிக்கும் விஷயமாகவே உள்ளது.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள் பிற்காலத்தில் பெற்றோராக மாறும் போது தன்னை பெற்றெடுத்த தாய், தந்தையர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதென்பது என்னவோ தற்போது நவீனமாகி விட்டது. பணம் கட்டிவிட்டால் போதும் முதியோர் இல்லங்களில் பெற்றோர் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று நம்பும் இன்றைய பிள்ளைகள், முதியோர் இல்லங்களில் தங்கள் பெற்றோர் படும் துன்ப துயரங்களை எண்ணுவதில்லை. தாமும் ஒரு காலத்தில் முதியவர்களாவோம் என்ற எண்ணத்தை மறந்து விடுகின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை உலகளாவிய ரீதியில் ஒப்புநோக்கும் போது கூடிய வீதத்தில முதியோர்களைக் கொண்ட நாடு என்ற பெருமை உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் முதியோர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் இவர்கள் பெரும்பாலும் தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர்.

இலங்கையில் உள்ள முதியோர்களில் 70 சதவீதமானோர் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்ந்து வருவதாகவும் சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இன்றைய சமூக அமைப்பு பெரும்பாலும் கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து விலகி தன்னிச்சையாக இயங்கும் குடும்பங்களையே பெரிதும் சார்ந்துள்ளது.குடும்பங்களில் உள்ள ஒரு நபரோ அல்லது குடும்பமோ புலம் பெயர்ந்து சென்று அயல் நாடுகளில் அமர்ந்தார்கள் என்றால் இதனால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் முதுமையில் காலம் தள்ளி வரும் வயதான பெற்றோர்கள்தான் என்பது சொல்லித் தெரிவதற்கில்லை. புலம் பெயர்தலால் அடையும் நன்மைகள் பலப்பல, அதே நேரத்தில் பலர் தமது பெற்றோர்களுக்கு கொடுக்கும் மனஉளைச்சலுக்கும் நிம்மதியின்மைக்கும் அளவில்லை என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

கறியின் சுவையை கரண்டி அறியாததை போன்று அறிவற்றவன் தர்மம் அறியான்



புண்ணியமிக்கவர்களே, சிலர் தன்னை பெரியவர் என காட்டிக் கொள்வதில் சந்தோஷப்படுகிறார்கள். பதவிகள், மரியாதைகள், கௌரவிப்புகள் கிடைப்பதை மிகவும் விரும்புவார்கள். ஆனால் அவை எதனையும் பெறுவதற்கான தகுதி அவர்களிடமில்லை. புத்த பகவான் வாழ்ந்திருந்த காலத்திலும் அத்தகையவர்கள் இருந்தார்கள். இந்தக் கதையில் அத்தகையதொரு சம்பவமே குறிப்பிடப்படுகிறது.

சாவத்திய நகரின் ஜேதவனராமத்தில் ஒரு பிக்கு இருந்தார். அவரது பெயர் உதாயி. ஓரளவு முதுமையானவர். நல்ல வாட்டசாட்டமானவர். அதாவது நல்ல உயரமும் அதற்கேற்ற பருமனும் கொண்ட அந்தப் பிக்கு கம்பீரமான தோற்றமுடையவர். கம்பீரத்துடன்தான் நடப்பார். அதிகமாக யாருடனும் பேச மாட்டார். அவரை பார்க்கும் ஏனையோர் இப்படித்தான் நினைப்பார்கள்.

"இந்த உத்தமர் மனஆற்றல்கள் மிகுந்தவராகத்தான் இருக்க வேண்டும். ஆழமான தர்ம விடயங்கள் என்பன தெரிந்த ஒரு உயர்ந்த பிக்குவாகத்தான் இருக்க வேண்டும். மகாதேரர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் அல்லவா அவர் அமர்கிறார். கண்டிப்பாக இவர் உத்தம குணங்கள் கொண்ட பெரிய தேரராகத்தான் இருக்க வேண்டும். ஞானப்பேற்று நிலைகளை அடைந்தவராகத்தான் இருக்க வேண்டும்".

இந்த தேரர் யாரிடமும் பெரிதாகப் பேசுவதில்லை. மகா தேரர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமர்ந்து கம்பீரமாக சுற்றும் முற்றும் பார்க்கும் இந்தப் பிக்குவை பார்க்கும் வேறு பிரதேசங்களிலிருந்து வருகை தரும் பிக்குமார்கள் மரியாதை செலுத்துவார்கள். வணங்கி கௌரவிப்பார்கள். காலப்போக்கில் ஒருசில பிக்குமார்களுக்கு, இந்த பிக்கு தம்மை ஒரு பெரும் தேரரைப் போல் காட்டிக் கொள்ளும் அளவுக்கு ஞானம் அவரிடம் இல்லை என்பதனை உணர்ந்தார்கள்.

தர்மம் தொடர்பாகவோ ஒழுக்கக்கோட்பாடுகள் தொடர்பாகவோ எவ்வித அறிவும் அவரிடம் இல்லை. தோற்றம் மாத்திரம்தான் கம்பீரமாக இருக்கிறது என்பதனை உணர்ந்தார்கள். இதனை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒருநாள் சில பிக்குமார்கள் இந்த உதாயீ தேரரிடம் சென்று தர்மம் தொடர்பாகவும் ஒழுக்கம் தொடர்பாகவும் ஒருசில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்கள். அப்போது இந்த உதாயீ பிக்கு பதில் அளிக்கத் தெரியாமல் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அமைதியாக முகத்தை சுளித்துக் கொண்டு இருந்தார். அப்போது அந்த பிக்குமார்கள், "புத்த பகவான் வாழ்ந்திருக்கின்ற காலத்தில் துறவு பூண்ட இந்தப் பிக்கு, காலையும் மாலையும் புத்த பகவானை தரிசித்துக் கொண்டு வாழும் இந்தப் பிக்கு இந்த புத்த சாசனத்தின் சாரமான நாற்பேருண்மைகள் தொடர்பாகக் கூட அறியாமல் இருக்கிறாரே" என்று தமக்குள் பேசிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு புத்த பகவானிடம் சென்றனர். அன்புடன் பகவானை வணங்கி ஒருபுறத்தில் அமர்ந்து இந்த உதாயீ பிக்குவின் அறியாமையை புத்த பகவானிடத்தில் கூறினார்கள். அச்சமயம் புத்த பகவான் இந்த செய்யுளை அழகாக போதித்தார்.

யாவஜீவம்பி சே பாலோ – பண்டிதங் பயிருபாசதி

ந சோ தம்மங் விஜானதி – தப்பீ சூபரசங் யதா

ஓர் அஞ்ஞான மூடன் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு ஞானமுள்ள பண்டிதருடன் பழகினாலும் கறியின் சுவை அறியாத கரண்டியைப் போன்று அவன் தர்மத்தினை அறிந்து கொள்ள மாட்டான்.

புண்ணியமிக்கவர்களே... அறிவாளிகளாவது இலகுவான விடயமல்ல. புத்த பகவான் அருகிலேயே இருந்தாலும், காலையும் மாலையும் புத்த பகவானை காணக்கிடைத்தாலும், புத்த பகவானின் பின்னாலேயே நடந்து சென்றாலும், புத்த பகவான் தர்மத்தை போதிக்கும் போது அருகிலேயே அமர்ந்திருந்தாலும் அறிவற்ற ஒருவரால் அந்த தர்மத்தினை உணர முடியாது என்பதனை இந்த கதை மூலம் நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த செய்யுளில் புத்த பகவான் தப்பீ அதாவது கரண்டிக்கே அறிவற்றவனை உவமைப்படுத்தியிருக்கிறார். ஒருநாள் முழுவதும் கறிச்சட்டியில் கரண்டியை போட்டு வைத்தாலும், கரண்டியில் அந்த உணவு பூசப்பட்டிருக்குமேயன்றி ஒருபோதும் அந்த கரண்டி 'இது இனிப்பு சுவை, இது உறைப்புச் சுவை' என கறியின் சுவையை அறிந்து கொள்ளாது. அறிவின்மைக்கு இதை விட வேறு உதாரணங்கள் தேவையா?

அந்த உதாயி பிக்கு மீது புத்த பகவானுள் பெரும் அனுதாபம் தோன்றியிருக்கும். ஆனால் என்ன செய்வது? தனக்கு தன்னை புகலிடமாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அறிவு மிக மிக முக்கியமாகும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் புதிதாக உருவாக்கப்படும் ஒப்பந்தங்கள்

மனிதன் சுதந்திரமாகவும் அடிப்படை உரிமைகளோடும் வாழ வேண்டும் எனத் துடிக்கின்றான். எனினும் இந்த உலகில் எந்தெந்த உரிமைகளின்றி மனிதன் வாழ முடியாதோ அந்த உரிமைகளே மனித உரிமைகளாகின்றன.

இரண்டாவது உலகப் போரின் போதும் அதற்கு முன்னரும் மிகக் கேவலமான முறையில் மனித உரிமைகள் மீறப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. சர்வதேச மனித உரிமைகள் சாசனம் ஒன்றைத் தயாரிப்பது இதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது. 1945 ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோவில் இணங்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டயம் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆதரவைப் பிரகடனப்படுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவொன்றை நிறுவியது.

1946 ஜனவரி மாதம் பொதுச்சபை தனது முதலாவது அமர்வின் போது சர்வதேச மனித உரிமைகள் சாசனமொன்றை வகுக்கும் பணியில் ஈடுபடுமாறும் ஆணைக்குழுவைக் கேட்டுக் கொண்டது. இந்த ஆணைக்குழு தனது பணியை 1947 பெப்ரவரி மாதம் ஆரம்பித்த போது இப்பணிக்கே முன்னுரிமை கொடுத்தது.

1948 டிசம்பர் 10ஆம் தகிதியன்று பொதுச் சபையில் எவ்வித கருத்து வேறுபாடுகளுமின்றி மனித உரமைகள் ஆணைக்குழு தயாரித்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. டிசம்பர் 10ஆம் திகதியே உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆதிகாலந்தொட்டு இடம்பெற்ற உரிமைப் பிணக்குகளின் மூலமாக அது இடம்பெற்ற சமூக அளவிலாவது அந்த உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. உதாரணமாக உரோம சமூகம் மனிதனை மனிதனாக மதிக்காது மனிதர்களை அடிமைகளாக்கி, அந்த அடிமைகளைப் பண்டங்கள் போல் நடத்தியது. ஆனால், இந்த நிலைமை காலப்போக்கில் மாறியது. உரிமைப் போராட்டங்கள் பல இடம் பெற்றிருந்தாலும் மனித உரிமைகள் வரலாற்றில் 1215 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'மக்னாகாட்டா' உடன்படிக்கை ஒரு மைல்கல்லாக அமைகின்றது.

இங்கிலாந்தில் மக்கள் மன்னனுக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததன் மூலம் சில உரிமைகள் 'மக்னா காட்டா'வில் அங்கீகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1688 ஆம் ஆண்டின் உரிமைகள் பிரகடனம், 1789 இல் பிரான்சிய புரட்சி, பின்னர் அமெரிக்கப் புரட்சி என்பன மனித உரிமைகள், போராட்டங்களாலும் புரட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உதயத்தைத் தொடர்ந்து பல உரிமைகளின் தொகுப்பாக அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இது அனைத்து மனிதனதும் பாதீனப்படுத்த முடியாததும், அனைத்துலகம் சார்ந்ததுமான மனித உரிமைகள் பற்றிய அடிப்படை அறிக்கையாகக் காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையானது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றையும் ஏற்று அங்கீகரித்து, அதனை ஏற்றுக் கொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் திறந்து விட தீர்மானித்தது.

இதே திகதியில் இந்த ஒப்பந்தங்களின் அமுலாக்கம் தொடர்பில் ஒரு விருப்பத் தெரிவிடை ஆவணம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டது. இந்தக் குடியியல் மற்றும் அரசியல் உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான விருப்பத் தெரிவிற்குரிய பின்னேட்டின் கீழ் குறித்த சூழ்நிலைகளுக்கு உட்பட்ட தனிப்பட்டோர் ஒப்பந்தத்தை ஏற்றுள்ள அரசுகளினால் மனித உரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிலையத்திற்கு முறையிடலாம்.

சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய உடன்பாட்டு ஒப்பந்தம் செயற்படவும் , தொழில் சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்வதற்கும், நியாயமான வேதனைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்ந்து கொள்வதற்கும், சமூகப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் போதுமான வாழ்க்கைத் தரங்களை உறுதி செய்வதற்கான உரிமைகளை ஏற்றுக் கொள்கின்றது.

அடுத்ததாக குடியியல் மற்றும் அரசியல் உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான இரண்டாவது விருப்பத்தெரிவிற்குரிய பின்னேட்டின்கீழ் சில நாடுகளின் அரசுகள் மரண தண்டனையை ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எழுத்தளவிலேயே கூறுகின்றன. இவைகளுடன் காலத்திற்குக் காலம் மனித உரிமைகள் சம்பந்தமான பிரகடனங்கள், ஒப்பந்தங்கள், கட்டுறுத்துகள், சமவாயங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

மேற்படி மனித உரிமைகளை சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் குழுக்களும் உள்ளன. குறிப்பாக ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மனித உரிமைகள் ஐரோப்பிய எண்ணங்களுக்கு என்றும், இந்த உரிமைகள் நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் என்றும், இதனை மேற்கு நாடுகள் நியாயமற்ற முறையில் கட்டாயப்படுத்துகின்றன என்றும் கூறுகின்றன.

ஆனால் பலர் மனித உரிமைகள் அனைத்துலகம் சார்ந்தவை என்பதில் உடன்படுகின்றனர். இந்த மனித உரிமைகளை சர்வதேச ரீதியில் அமுல்படுத்துவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச ரீதியில் பல நிறுவனங்களை அமைத்துப் போராடி வருகின்றது.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் இவ்வாறு இருக்க, அநேகமான நாடுகள் தங்களின் அரசமைப்பில் சில மனித உரிமைகளை உள்வாங்கி இருக்கின்றன. இவ்வாறு உள்வாங்கப்பட்ட மனித உரிமைகள் அந்த நாடுகளின் அடிப்படை உரிமைகளின் எனப்படும். இந்த வகையில் இலங்கை அரசமைப்பும் சில அடிப்படை உரிமைகளைக்கொண்டுள்ளது.

இலங்கையில் தற்போதைய அரசமைப்பிற்கு இணங்க அடிப்படை உரிமை மீறப்பட்ட ஒருவர் அல்லது தனது அடிப்படை உரிமை மீறப்பட இருக்கிறது என தீர்மானிக்கும் ஒருவர் அல்லது அவர் சார்பாக சட்டத்தரணி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் பரிகாரத்தைப் பெறலாம். தற்பொழுது அடிப்படை உரிமை மீறப்பட்டவர் இறந்திருந்தால் அவர் சார்பாக அவரது மனைவியை அடிப்படை உரிமை மீறல் மனுவை சமர்ப்பிப்பதற்கு அனுமதித்திருக்கின்றது.

அடிப்படை உரிமை மீறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்று சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அரச நிறுவனங்களால் மீறப்படுகின்ற போது அதற்கான பரிகாரத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளுக்கு பரந்த பொருள் கொடுப்பதற்காக உயர் நீதிமன்றம் பெரிதும் போராடி வருகின்றது.

இலங்கையில் அடிப்படை உரிமை மீறல்களுக்கான அனைத்து நிவாரணங்களையும் நாடித்திருப்தியுறாத ஒருவர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நலையத்திற்கு முறையிடலாம். இது இலங்கை குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான முதலாவது விருப்பத் தெரிவிடை ஆவணத்திற்கு கையெழுத்திட்டதன் மூலம் பெறப்பட்டது. இலங்கை அரசமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கு அப்பால் அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாடுகள் என்று சில உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இது அரசையும், மக்களையும் நெறிப்படுத்தும் ஒரு கோட்பாடாகவே காணப்படுகின்றது.

நவாலியூர்

செல்வராஜா ரமேஷ்

(உள்ளூராட்சி உதவியாளர்)

பிரதேச சபை, காரைநகர்

சர்வதேச சிறுவர் தினம் ஜனாதிபதியின்...

ஆரோக்கியத்தை வளப்படுத்துவதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை போன்றே அவர்கள் நற்பண்புள்ளவர்களாக வளர்வதற்கான சூழலை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

ஒரு நாடு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எவ்வளவு உயர்ந்த அபிவிருத்திப் படிநிலைகளை அடைந்து கொண்டாலும், சமூகம் அன்பு, அறம் போன்ற அடிப்படை மானிடப் பண்புகளைப் பெற்றிருக்கவில்லை என்றால் அதனை ஒரு சிறந்த தேசமாக கருத முடியாதென நான் நம்புகிறேன். ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் எமது சிறுவர் தலைமுறையை சிறந்த ஒழுக்கப் பெறுமானங்களுடன் தொழிநுட்ப திறன்கள் மற்றும் மொழி அறிவைப் பெற்றவர்களாக வளப்படுத்த வேண்டும்.

உள, உடல். பலவீனங்களிலிருந்து விடுபட்ட பிரஜைகளைக் கொண்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதுவே எனது ஒரே எதிர்பார்ப்பாகும். அத்தகையதொரு நாட்டிலேயே சிறுவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் மனநிறைவாகவும் வாழ்வதற்கான உறுதியான உத்தரவாதம் இருக்கும். இத்தகையதொரு தேசத்தின் நன்மைகளை அனுபவித்து மகிழும் ஒரு தலைமுறையை கட்டியெழுப்புவதற்கு உங்களது பிள்ளைகளின் சிறு பராயத்தை நீங்கள் மிகுந்த பொறுப்புடன் நெறிப்படுத்துவீர்களென நான் எண்ணுகின்றேன். அப்போதுதான் 'எமது தேசத்தை நாமே கட்டியெழுப்புவோம்' என்ற இவ்வருட உலக சிறுவர் தின கருப்பொருளை யதார்த்தமாக்க முடியும்.

நவ.17 இல் புதிய அரசாங்கத்தின்...

மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீர்வள மற்றும் நீர்ப்பாசன துறைகளுக்காக முக்கியத்துவம் வழங்குதல்.

☐ அரசாங்கத்தின் வருமானம் 2021 ஆம் ஆண்டிற்குள் தேசிய உற்பத்தியில் 10.2 சதவீதமாக அமையும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த நிலைமையின் கீழ் செலவை முகாமைத்துவம் செய்யும் நடைமுறையை முன்னெடுத்து வர்த்தக நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு தேவையான சூழ்நிலையை ஏற்படுத்தி அரச முதலீட்டு வேலைத்திட்டத்திற்காக வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

☐ அரசாங்க பணிகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

☐ குறைந்த வளங்களை பயன்படுத்தி மிகவும் பயனுள்ள பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் தற்பொழுதுள்ள நடைமுறைகளை மதிப்பீடு செய்து பரந்துபட்ட நடைமுறையில் ஈடுபடுவது தொடர்பில் கவனம் செலுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட கொள்கையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜிதவுக்கு ஆஜராக...

ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைவாக இந்த அழைப்பாணை வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அரசியல் அழுத்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாக கொமாண்டர் சுமித் ரணசிங்க தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இம் முறைப்பாட்டுக்கமைவாக ராஜித்த சேனாரத்ன உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள நிலையில், ராஜித்த சேனாரத்னவிற்கு (29) ஆணைக்குழுவில் ஆஜராகாத காரணத்தால் அவருக்கு மீண்டும் அழைப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச நீதி கோரி...

நேற்று (30) காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?, 'எங்கள் உறவுக்காக நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்பட வேண்டும், இலங்கையில் போர்க்குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துங்கள், சின்னஞ்சிறு சிறார்கள் என்ன ஆயுதம் ஏந்தியவர்களா?, பாடசாலை சென்ற மாணவன் எங்கே?' போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கவனயீர்ப்பு போராட்டம் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றிருந்ததுடன் போராட்டத்தில் 30க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பில் தீப்பிடித்து...

ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பு படையின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளது. எனினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தீ விபத்தையடுத்து அப் பகுதியில் ஏற்பட்ட வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் முயற்சிகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளிலிருந்து...

மெல்பர்ன் நகரிலிருந்து ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றில் 287 இலங்கையர்கள் மத்தல விமான நிலையத்தின் வாயிலாகவும், ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து 47 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமா நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியதாக தெரிவித்தார்.

இதேபோல, இந்தியாவின் மும்பை நகரில் இருந்து 5 இலங்கையர்களும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். இதேவேளை, நாட்டில் (29) 11 பேருக்கு கொவிட்19 தொற்று உறுதியாகியுள்ளது.

ஓமானிலிருந்து நாடுதிரும்பிய 07 பேருக்கும், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், லெபனான் முதலான நாடுகளிலிருந்து நாடு திரும்பியிருந்த தலா ஒவ்வொருவருக்கு கொவிட்19 தொற்று உறுதியாகியுள்ளது. இதன்படி, நாட்டில் கொவிட்19 தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 03 ஆயிரத்து 374 ஆக உயர்வடைந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுபவர்களின் எண்ணிக்கை 131 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நாட்டில் கொவிட் 19 தொற்றினால் பீடிக்கப்பட்டிருந்த மேலும் 20 பேர் நேற்று குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொவிட் 19 தொற்றில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 03 ஆயிரத்து 230 ஆக அதிகரித்துள்ளது.

கட்டடங்களுக்கு அனுமதி...

தொடர்பில் ஆராய்கின்ற உள்ளூராட்சிமன்ற அதிகாரிகளுக்கு, புவிச்சரிதவியல் மற்றும் அளவை சுரங்கப் பணியகத்தினால் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், இடிந்து வீழ்ந்த பெருமளவான கட்டிடங்கள், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளின் அனுமதியுடனேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி பூவெலிக்கடைப் பகுதியில், அண்மையில் ஐந்து மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததையடுத்தே, இவ்வாறு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி பூவெலிக்கடைப் பகுதியில் இடிந்து வீழ்ந்த கட்டடம், உரிய முறையில் நிர்மாணிக்கப்படவில்லையென ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஐந்து மாடிகளை தாங்கும் திறன் இல்லாத நிலையிலேயே, இக் கட்டடத்தின் அடித்தளம் கட்டப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதேவேளை, கண்டி பூவெலிக்கடை கட்டடம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையும், நேற்று(30) மத்திய மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக் கட்டடத்தின் உரிமையாளர் (29) கைது செய்யப்பட்ட நிலையில், அவர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விசர் நாய் கடித்து மாணவன்...

07 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவியான நேத்ஸரா நாய் கடிக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தாமதிக்காமல் உடனடியாக வைத்தியசாலையை நாடினால் உயிரை காப்பாற்ற முடியுமென வைத்தியர் கூறியுள்ளார்.

இச் சம்பவத்தால் உயிரிழந்த இருவரின் உடல் பாகங்கள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அறிக்கைகள் கிடைத்த பின்னரே அதை உறுதிப்படுத்த முடியும் என்றும் கராப்பிட்டிய ஆஸ்பத்திரி உதவி சட்ட வைத்திய அதிகாரி ருவன் நாணயக்கார தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் நிதி ஒதுக்கீட்டினால் சம்மாந்துறை அல் அர்சத் மகா வித்தியாலயத்தில் கட்டிமுடிக்கப்பட்ட விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான பல்தேவை கட்டிடத்தை கையேற்கும் நிகழ்வு அதிபர் எம்.ஏ. அப்துல் றஹீம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜப்பான் நாட்டு வதிவிட பிரதிநிதியும் திட்ட ஆலோசகருமான புமி இற்றோ நினைவக மரக்கன்று நடுவதனையும் அதிகாரிகளையும் காணலாம். (படம்: பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

வடக்கு, கிழக்கு பகுதிகளில்...

03ஆம் பக்க தொடர்...

இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொண்டு, தமக்கான ஆதரவை வழங்குமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

குளிர்காலம் ஆரம்பம்; கொவிட்...

03ஆம் பக்க தொடர்...

சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என இதன் போது இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்றிலிருந்து விடுப்பட்ட நாடாக உலகில் இலங்கை மாறியுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவரிடம் மேலும் கூறியுள்ளார்.

தனிமைப்படுத்தல்...

03ஆம் பக்க தொடர்...

பராமரிக்கப்பட்டு வரும் 74 தனிமைப் படுத்தப்பட்ட நிலையங்களில் 7,132 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதாள உலக குழுக்கள்...

தொடர்பில் தகவல் வழங்கும் நபர்களுக்கும், பொலிஸாருக்கு உதவும் நபர்களுக்கும் வழங்கப்படும் பணப்பரிசை அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒக்டோபர் 09 இல்...

நவம்பர் 09 இல் பாடசாலைகள் திறக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் மூடப்பட்ட பாடசாலைகள் கடந்த மாதமே மீண்டும் திறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.(பா)

சந்தேகநபர் ரியாஜ் பதியுதீ...

03ஆம் பக்க தொடர்...

நிறைவடைந்துள்ள நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் தெரிவித்தது

மேற்படி குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகநபரான ரியாஜ் பதியுதீன் கடந்த ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி புத்தளத்திலுள்ள அவரது வீட்டிலிருந்து குற்றத்தடுப்பு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர்கள் மேற்படி குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கோடீஸ்வர வர்த்தகரான முஹம்மத் அமீன் முகமட் அஸ்மின் மற்றும் சுங்கத்திணைக்கள அதிகாரி ஒருவர் உட்பட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அதற்கிணங்க நேற்றைய தினம்(30) ரியாஜ்

பதியுதீன் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனையவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரு துண்டுகளான கைகளை பொருத்தி...

யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளார் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். யாழ் போதனா வைத்தியசாலையில் பிளாஸ்டி சத்திரசிகிச்சை ஒருவருக்கு மேற்கொண்ட விதம் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று(30) யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே த.சத்தியமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், பொதுமக்கள் கை,கால்கள் துண்டாகுதல் தொடர்பாக விழிப்புணர்வு அடையவேண்டும்.மேலும் அளவுக்கு மேலாக வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றாலும் இவ்வாறான சிகிச்சைகள் வழங்கமுடியாது போகக்கூடும்.

இது பல சிக்கலான சிகிச்சைமுறை என்பதை பொதுமக்கள் விழிப்புணர்வு அடையவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகவியலாளர்...

03ஆம் பக்க தொடர்...

பிணைகள் அடிப்படையிலும் விடுவித்த நீதவான், ஒவ்வொரு வாரத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என அவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதை தவிர்க்குமாறும் அவ்வாறு முறைப்பாடு முன்வைக்கப்பட்டால் பிணை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவதாகவும் நீதவான் சந்தேகநபரை எச்சரித்துள்ளார்.

மனு விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதவான், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு...

03ஆம் பக்க தொடர்...

இதேவேளை, இவ்வருடத்திலிருந்து அனைத்து பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கும் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மாணவர் அடையாளக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் கல்வி தகவல்கள் உட்சேர்க்கப்படும் போது இந்த குறியீடு முக்கியத்துவம் பெறும். எனவே பெற்றோர் அக்குறியீடுள்ள பகுதியை வேறாக எடுத்து பெற்றோர் அதை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் கோரிக்கையை ஏற்று...

பிரதமரினால் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதனை தொடர்ந்து கல்லூரியின் அதிபர் டி.பீ. பரமேஸ்வரன், பிரதமருக்கு 2019ஆம் ஆண்டுக்கான கல்லூரி மலரும், நினைவு பரிசொன்றையும் வழங்கினார்.

பரிசளிப்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

'இக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரி, தமிழ் மக்களின் மொழி பண்பாட்டு அம்சங்களைக் கொண்டு இயங்கும் ஒரு தேசிய பாடசாலை என்பதுடன் சிறந்த கல்விமான்களையும் சமூகப் பொறுப்புள்ள மாணவர்களையும் எதிர்காலத்தின் நற்பிரஜைகளையும் இக்கல்லூரி தந்துள்ளது. இந்த மாணவர்களே நாட்டின் எதிர்கால தலைவர்களாவர்.

1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி ஆண்கள் பாடசாலையாக மிளிர்வதுடன் தமிழ், ஆங்கில மொழிமூலமான கற்கைநெறிச் செயற்பாட்டைக்கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. மாணவர்களை பண்படுத்தி வழிப்படுத்துவதில் பாடசாலைகளே முதன்மை வகிக்கின்றன. 'ஒரு பாடசாலை திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்' என்பது பழமொழி.

நல்ல மாணவர்களை உருவாக்குதல் பாடசாலைகளின் பணியாவதுடன், அவர்களின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடையதாகும்.

'கற்றாங்கு ஒழுகுக' என்ற குறிக்கோளுடன் இயங்கும் இக் கல்லூரியானது ஒழுக்கம் மற்றும் கல்வி நிலையில் மேன்மைபெற்ற பல மேதைகளை உருவாக்குவதில் விசேட கவனம் செலுத்தி வருகின்றமையை நான் அறிவேன்.

நாட்டின் வளம் என்பது நல்ல மாணவர்களை உருவாக்கி கல்வியில் முன்னிலையில் இருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து சுபீட்சமான வாழ்வைக் கொண்டாடும் சமூகச்சூழலை ஏற்படுத்தி முழு நாட்டையும் செல்வச் செழிப்புடன் ஆக்கும் ஒருபெரும் முயற்சியாகும். கல்வியால் ஏற்படுத்த முடியாத மாற்றத்தை எக்காரணியும் ஏற்படுத்த முடியாது என்பதில் ஐயமில்லை.

கல்விச் செல்வமே அழியாததும் பிறர் கொள்ளை கொண்டு போக முடியாததுமாகும். கல்வியை வழங்கும் ஒவ்வொரு நிறுவனமும் நாட்டிற்குரிய நற்பிரஜைகளை உருவாக்கும் உன்னத சேவையை ஆற்றுகின்றன. அந்தவகையில் கொழும்பு இந்துக்கல்லூரியின் மூலமும் மாணவர்களுக்கு முறையான கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

30 ஆண்டுகால யுத்தத்தை நிறைவுசெய்து நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்பி நாட்டின் அபிவிருத்தியை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். போரின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்ப வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல திட்டங்களை எமது அரசாங்கம் அன்று கொண்டுவந்தது. இன்று மக்கள் மீண்டும் எம்மை ஆட்சிக்கு கொண்டுவந்துள்ளனர். அவர்களின் ஆணையின் மூலம் மேலும் பல நிலையான அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொள்ள எமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கல்விச் செயற்பாடுகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி எம் நாட்டின் கல்வி வளர்ச்சியை மேன்நிலைக்கு கொண்டுசெல்வதே எமது இலட்சியமாகும்.

இன்று கோவிட் 19 பிரச்சினையை உலகளாவிய சவாலாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். எமது நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் இப்பெரும் சவாலை கட்டுக்குள் வைத்துள்ளோம். இந்த பிரச்சினைகளினால் பாடசாலை பிள்ளைகளாகிய உங்களின் கல்வி பாதிப்படையக்கூடாது. கொரோனா நிலைமை காரணமாக பாடசாலை விடுமுறை காலத்தில் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக மாணவர்களுக்கு செவிமடுக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்போது பாடசாலையை விரைவாக ஆரம்பிக்குமாறு மாணவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டனர். அதற்கேற்ப முடங்கிக்கிடந்த நாட்டின் நிலைமைகளை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவந்து பாடசாலை நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிக்கும் முயற்சியில் நாம் வெற்றிகண்டோம். பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது.

கல்வியில் போன்றே மாணவர்கள் விளையாட்டுத்துறையிலும் ஈடுபட வேண்டும். உங்களை போன்றே வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மாணவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டமை அறிய முடிந்தது.

எதிர்காலத்தின் தலைவர்களாக விளங்கும் நீங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

அதேபோன்று இக்கல்லூரி, ஏனைய பிரதேச பாடசாலைகளுக்கு முன் உதாரணமான பாடசாலையாக விளங்க வேண்டும்' எனத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தமிழில் உரையாற்றி பிரதமர், 'என் அன்பார்ந்த மாணவர்களே, நீங்கள் தான் எமது நாட்டின் எதிர்கால தலைவர்கள். உங்கள் அனைவரையும் இன்று நான் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமைய பிரார்த்திக்கிறேன்' எனத் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில், இந்து மதகுருமார்களான இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கலாநிதி எஸ். சந்தீர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இந்துக் கல்லூரியின் அதிபர் டி.பீ.பரமேஸ்வரன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கொவிட் 19 எதிர்கொண்டமை 05 ஆசியான்...

03ஆம் பக்க தொடர்...

இருப்பதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு நாடுகளினதும் கொவிட் 19 நிலைமைகள் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் சபாநாயகருடனான இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. ஆசியான் நாடுகள் இலங்கையுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளை பாராட்டிய சபாநாயகர், எதிர்காலத்திலும் இலங்கை இந்த நல்லுறவை பேணுவது தொடர்பில் வலியுறுத்தினார்.

இதேவேளை, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மலேசிய தூதுவர் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களை மலேசியாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் பாராளுமன்ற அமர்வுகளில் பார்வையாளராக கலந்துகொள்ளுமாறு குறித்த தூதுவர்கள் இதன் போது இலங்கையிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கை கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பான எழுத்துமூல அழைப்பிதழை இலங்கை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்தனர்.

இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகருடன் யாங் க்தாய், வியட்நாம் தூதுவர் பாம் தி பிச் நொகோக், இந்தோனேசிய தூதுவர் குஸ்டி நுரா அர்தியாசா, தாய்லாந்து தூதுவர் ச்சுலமணி சார்ட்சுவன், மியன்மார் தூதுவர் ஹான் து ஆகியோர் ஆசியான் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சபாநாயகருடன் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் வசந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நீதி அமைச்சில் தொழில் பெற்று...

வழங்கி பணம்மோசடி செய்வது தொடர்பாக தகவல் கிடைத்துள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்தது.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட பல இளைஞர், யுவதிகள் கடந்த சில நாட்களாக நீதி அமைச்சிற்கு வருகை தந்துள்ளனர். அம்பாறை.நீர்கொழும்பு, கல்கிஸ்ஸ, தங்கொடுவ போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து இவ்வாறு நேர்முக பரீட்சைக்கு வந்துள்ளதோடு வந்த பின்னர்தான் அவர்கள் ஏமாற்றமடைந்தது தெரிய வந்துள்ளது.

அவர்கள் 17,500 ரூபா முதல் 1,85, 000 ரூபா வரை பணம் வழங்கியுள்ளனர். சமந்த என்ற பெயருள்ள நபரே இவர்களை ஏமாற்றியுள்ளதோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டே இந்த மோசடியை செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இது வரை 45 இளைஞர், யுவதிகள் இவ்வாறு ஏமாற்றமடைந்துள்ளனர்.

இவ்வாறு நேற்று அமைச்சுக்கு வந்த இளைஞர், யுவதிகளுடன் அமைச்சர் அலி சப்ரி உரையாடியதோடு இது தொடர்பில் சி.ஐ.டிக்கு அறிவித்து உடன் விசாரணை நடத்துமாறும் அமைச்சர் பணித்துள்ளார்.

உரிய ஆட்சேர்ப்பு முறைக்கமையவே அரச துறைக்கு ஆட்கள் சேர்க்கப்படுவர் எனவும் கற்ற இளைஞர், யுவதிகள் இது தொடர்பில் முன்கூட்டி அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.(பா)

சுமணரத்ன தேரருக்கு பிணை;...

வாக்குமூலம் வழங்குமாறும் எதிர்வரும் நவம்பர் 27 திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பண்டாரவெளி பகுதியில் பௌத்த மத அடையாளம் இருப்பதாக இப் பகுதியில் கடந்த காலங்களில் சுமணரத்தன தேரர் சென்ற நிலையில் பல சர்ச்சைகள் இடம்பெற்று நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்றுவருகின்றது.

இந்தஇடத்தில் தொல்லியல் திணைக்களம் அடையாளம் கண்டு அங்கு திணைக்களம் தற்காலிக கொட்டகை அமைத்து தொல்பொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி அங்கு சென்ற அம்பிட்டிய சுமணரத்தன தேரர் தொல் பொருள் திணைக்கள அதிகாரிகளை தாக்கிய சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிசார் அம்பிட்டிய சுமணரத்தன தேரரும் அவருடன் சேர்ந்த 03 பேருக்கும் எதிராக அதிகாரிகளை தாக்கியது, அவர்களை தடுத்துவைத்தது, அதிகாரிகள் கடமையை செய்யாவிடாது இடையூறு ஏற்படுத்தியது போன்ற குற்றச்சாட்டுக்கு வழக்கு தாக்குதல் செய்தனர்.

இதனையடுத்து நேற்று (30) புதன் கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் அம்பிட்டிய சுமணரத்தன தேரர் உட்பட 03 பேர் ஆஜராகினர் இதன் போது இவர்களை நீதவான் 02 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவித்ததுடன் தொல்லியல் திணைக்களத்துக்கு இடையூறு வழங்கக் கூடாது, பொதுமக்களை அச்சுறுத்தக் கூடாது எனவும் எச்சரித்து கரடியாறு பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்குமாறு எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை நீதிமன்ற பகுதில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டுள்ளதுடன் தேரர் 50 மேற்பட்ட அவரது ஆதரவாளர்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

டிரம்ப், பைடன் முதலாவது நேரடி விவாதத்தில் 'கடும் வாக்குவாதம்'

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜோ பைடனுக்கு இடையிலான முதலாவது நேரடி விவாதத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதோடு, மோசமான வர்த்தை பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒஹையோ மாநிலத்தில் நடைபெற்ற இந்த விவாதத்தில் ஜோ பைடனை ஒரு இடதுசாரி என்றும் அவர் சோசலிசத்தை வளர்ப்பதாகவும் டிரம்ப் குற்றம்சாட்டினார். மறுபுறம் டிரம்பை ஓர் இனவாதியாக பகிரங்கமாக அழைத்த பைடன், தொடர்ந்து தமக்கு இடையூறு செய்தபோது ‘வாயை மூடு’ என்று கடுமையாகக் கூறினார்.

கொரோனா வைரஸ் பரவலை முன்னிட்டு இருவரும் விவாதத்தின் ஆரம்பத்தில் கைகுலுக்கவில்லை.

இந்த விவாதத்தில் கொவிட்–19 நோய்ப்பரவல், இனவாதப் பிரச்சினைகள், புதிய உச்ச நீதிமன்ற நீதிபதியின் நியமனம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இருவரும் வாதிட்டனர்.

டிரம்ப் கடந்த 10 ஆண்டுகளாக 750 டொலர் மட்டுமே வருமான வரி செலுத்திய விவகாரம் குறித்தும் பேசப்பட்டது.

விவாதம் ஆரம்பிப்பதற்கு சில மணிநேரம் இருந்தபோது ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடன், துணை ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் இருவரும் கடந்த ஆண்டுக்கான தங்கள் வருமான வரி விபரங்களை வெளியிட்டனர். டிரம்ப் இதுபோன்று வெளியிடுவாரா என்றும் கேள்வி எழுப்பினர்.

யாருக்கு வாக்களிப்பது என்று இன்னும் முடிவு செய்யாதோரைத் தங்கள் பக்கம் ஈர்க்கும் முயற்சியில் டிரம்பும் பைடனும் ஈடுபட்டனர். 10 இல் ஒரு அமெரிக்கர் இன்னும் யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி தீர்மானிக்கவில்லை என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

செவ்வாய் நிலத்துக்குக் கீழ் மூன்று ஏரிகள் கண்டுபிடிப்பு

செவ்வாய் கிரக தென் துருவத்திற்கு அருகில் மூன்று புதிய நிலத்தடி ஏரிகள் கண்டறியப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு கணிக்கப்பட்ட நான்காவது ஏரி ஒன்று இருப்பதையும் விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

உயிரியலுக்கு திரவ நீர் இன்றி அமையாததாக இருக்கும் நிலையில் சூரிய குடும்பத்தில் வேறு இடத்தில் உயிர்கள் இருப்பதற்கான சாத்தியம் இந்த கண்டுபிடிப்பின் மூலம் அதிகரித்துள்ளது.

இந்த ஏரிகள் மிகவும் உப்புத் தன்மை கொண்டாக இருக்கும் நிலையில் நுண்ணுயிரி வாழ்க்கை கட்டமைப்பு ஒன்றுக்கு அது சவாலாக இருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. செவ்வாயை வலம் வரும் மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தின் தரவுகளை பயன்படுத்தி ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் இந்த புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளது.

செவ்வாய் மேற்பரப்பில் பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நதிகள், குலங்கள் மற்றும் ஏரிகளாக நீர் ஓட்டம் இருந்துள்ளது. எனினும் செவ்வாய் தனது வளிமண்டலத்தை இழந்திருக்கும் நிலையில் தற்காலத்தில் அதன் மேற்பரப்பில் திரவ நீர் இருக்க சாத்தியமில்லாதுள்ளது.

தற்போது செவ்வாய் கிரகத்தில் கண்டறியப்பட்டுள்ள ஏரிகளிலுள்ள பனி உருகுவதற்கு தேவையான வெப்பம் கிடைக்காததால், அங்கு காணப்படும் நீர் உப்புகளின் அதிக செறிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

இத்தகைய நிலைமைகளில் செவ்வாய் கிரகத்தில் உயிரிகள் வாழ முடியுமா என்பது அங்கு காணப்படும் நீர் ஆதாரங்கள் எவ்வளவு உப்புத்தன்மை கொண்டவை என்பதைப் பொறுத்தே அமையும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதற்கு மேலதிக ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன.

தொண்டூழியர்களுக்கு எதிராக 50 பெண்கள் பாலியல் புகார்



உலக சுகாதார அமைப்பு மற்றும் முன்னணி அரச சார்பற்ற தொண்டு அமைப்புகளின் எபோலா உதவிப் பணியாளர்கள் மீது கொங்கோ நாட்டின் 50க்கும் அதிகமான பெண்கள் பாலியல் புகார் அளித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்துவதாக உலக சுகாதார அமைப்பு உறுதி அளித்துள்ளது.

இரு செய்தி நிறுவனங்கள் மேற்கொண்ட விசாரணைகளிலேயே இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மருத்துவமனைகளில் மதுபானம் தந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக பல உள்ளூர் பெண்களும் குற்றம்சாட்டியுள்ளனர். இதில் இரு பெண்கள் கர்ப்பமடைந்துள்ளனர்.

2018 தொடக்கம் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியிலேயே இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எபோலா வைரஸ் தொற்றினால் கொங்கோவில் 2000க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். அதனை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பு முன்னின்று செயற்பட்ட நிலையில் அந்த நோய்த் தொற்று கட்டுப்படுத்தப்பட்டதாக கடந்த ஜூனில் அறிவிக்கப்பட்டது.

குவைட் புதிய மன்னராக முடிசூடினார் செய்க் நவாப்

காலஞ்சென்ற குவைட் ஆட்சியாளர் செய்க் சபாஹ் அல் அஹமத் அல் சபாவுக்கு பதில் அவரது சகோதரர் செய்க் நவாப் அல் ஜப்ரில் அல் சபா புதிய மன்னராக முடிசூடிக்கொண்டார்.

91 வயதான அல் சபாஹ்வின் மரணம் குறித்து அறிவித்த குவைட் அமைச்சரவை புதிய மன்னர் முடிசூட்டப்படுவது பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டது.

2006ஆம் ஆண்டு தொடக்கம் முடிக்குரிய இளவரசராக இருந்து வந்த செய்க் நவாப், குவைட்டின் 10ஆவது ஆட்சியாளரும் அந்நாட்டை சுமார் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவருமான செய்க் அஹமது அல் ஜாபிரின் மகனாவார்.

83 வயதான புதிய மன்னர் பாதுகாப்பு, உள்துறை மற்றும் சமூக சேவைகள் என பல அமைச்சரவை பதவிகளை வகித்துள்ளார். மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அரசியல் பதற்றங்களுக்கு மத்தியிலேயே அவர் புதிய ஆட்சியாளராக பதவி ஏற்றுள்ளார்.

எண்ணெய் வளம் கொண்ட குவைட்டில் கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சியில் இருந்த அல் சபாவின் மரணத்தை ஒட்டி அந்நாட்டில் 40 நாள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

16 மாத இழுபறிக்குப் பின் பெல்ஜியத்தில் புதிய அரசு

பெல்ஜியத்தில் பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்து 16 மாதங்களின் பின் பெரும்பான்மை அரசொன்றை அமைப்பதற்கு ஏழு கட்சிகள் இணங்கியுள்ளன.

காபந்து அரசின் நிதி அமைச்சர் அலெக்சாண்டர் டி க்ரூ புதிய பிரதமராக அந்நாட்டு மன்னரால் அறிவிக்கப்படவுள்ளார். டச் மற்றும் பிரெஞ்ச் மொழியால் பிரிந்த ஏழு கட்சிகளிடையே கடந்த பல வாரங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னரே புதிய அரசுக்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸினால் ஐரோப்பாவில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான பெல்ஜியத்தில் இந்த வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நேற்று 10,000ஐ தொட்டது. பெல்ஜியம் வைரஸ் தொற்றினால் அதிக உயிரிழப்பு வீதத்தைக் கொண்ட நாடாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாதம் கொவிட்–19 ஆரம்பித்தது தொடக்கம் பெல்ஜியத்தில் காபந்து அரசு ஒன்றே இயங்கி வந்ததோடு 2018 டிசம்பரில் நான்கு கட்சிகளின் கூட்டணி உடைந்தது தொடக்கம் முழுமையான அரசு ஒன்று அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அசர்பைஜான்-ஆர்மேனிய மோதல் 4ஆவது நாளாக தொடர்ந்து நீடிப்பு

முழு வீச்சில் போர் மூழும் அச்சம்

அசர்பைஜான் மற்றும் ஆர்மேனிய இனப் படைகளுக்கு இடையில் நான்காவது நாளாகவும் நேற்று மோதல் இடம்பெற்றது. கடந்த பல தசாப்தங்களாக இடம்பெறும் இந்தப் பிரச்சினையில் 1994 போர் நிறுத்தத்திற்கு பின்னர் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய மோதலாக இது மாறியுள்ளது.

இரு தரப்பையும் பிரிக்கும் எல்லைக் கோட்டை ஒட்டி பல திசைகளில் இருந்தும் தம் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அசர்பைஜான் மற்றும் சர்ச்சைக்குரிய நகொர்னோ கரபக் பிராந்திய ஆர்மேனியர்கள் பரஸ்பரம் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தப் பிராந்திய எல்லைகளைத் தாண்டியும் தற்போது மோதல் பரவியுள்ளது. இது முன்னாள் சோவியட் ஒன்றிய கூட்டமைப்பு நாடுகளான அசர்பைஜான் மற்றும் ஆர்மேனியாவுக்கு இடையிலான முழுமையான போராக மாறும் அபாயம் அதிகரித்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் கடந்த செவ்வாய்க்கிழமை தொலைபேசியில் பேசிய ஆர்மேனிய பிரதமர் நிகோல் பசின்யான், தற்போதைய சூழலில் உதவி கோர தாம் எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவ்வாறான கோரிக்கை ஒன்றுக்கான வாய்ப்பை அவர் மறுக்கவில்லை.

“கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு அல்லது அது இன்றி ஆர்மேனியா தனது பாதுகாப்பை உறுதி செய்யும்” என்று பசின்யான் கூறியதாக ரஷ்ய செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

நகொர்னோ கரபக் மோதலில் ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டுக்கான வாய்ப்புப் பற்றி புட்டின் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா, ஆர்மேனியா உட்பட ஆறு முன்னாள் சோவியட் ஒன்றிய நாடுகளுக்கு இடையே கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நகொர்னோ கரபக் அசர்பைஜான் நாட்டுக்குள் உள்ள ஒரு பிளவுபட்ட பிராந்தியமாகும். இந்தப் பிராந்தியம் ஆர்மேனிய இனத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும் இதன் தன்னாட்சியை உலகின் எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

இங்கு இடம்பெறும் முழுவீச்சிலான யுத்தம் ஆர்மேனிய ஆதரவு ரஷ்யாவும் அசர்பைஜான் ஆதரவு துருக்கியும் நேரடியாகத் தலையிடும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மோதல் வெடித்தது தொடக்கம் குறைந்து 2,300 ஆர்மேனியப் படையினர் தமது துருப்புகளால் கொல்லப்பட்டு அல்லது காயப்படுத்தப்பட்டு இருப்பதாக அசர்பைஜான் பாதுகாப்பு அமைச்சு நேற்று குறிப்பிட்டுள்ளது.

இதில் அசர்பைஜான் கைப்பற்றிய பகுதிகளை மீட்கும் முயற்சியிலேயே ஆர்மேனிய இனப் படை ஈடுபட்டிருப்பதாகவும் அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த மோதல் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

9 கொலைகளையும் ஒப்புக்கொண்ட ஜப்பானின் 'டிவிட்டர் கொலையாளி'

ஜப்பானில் ஒன்பது பேரைக் கொன்று அவர்களின் உடல் பாகங்களை தனது அடுக்குமாடிக் குடியிருப்பில் வைத்திருந்த குற்றத்தை 29 வயதான டகஹிரோ சிரைசி ஒப்புக்கொண்டுள்ளார்.

உணர்வுபூர்வமானவர்களை இலக்கு வைத்து அவர்களை மரணத்திற்கு இட்டுச் சென்ற குற்றச்சாட்டில் சிரைசி மூன்று ஆண்டுகளுக்கு முன் கைது செய்யப்பட்டார்.

“டிவிட்டர் கொலையாளி” என்று அழைக்கப்படும் இந்த இளைஞர் கொல்லப்பட்டவர்களின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி, குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இந்த டிவிட்டர் கொலையாளி சமூக ஊடகத்தை பயன்படுத்தி உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்ட 15 தொடக்கம் 26 வயது கொண்டவர்களை இலக்கு வைத்துள்ளார். அவ்வாறானவர்களை தற்கொலை செய்யத் தூண்டி இருக்கும் இளைஞன் அவர்களை அணுகி உயிரை மாய்த்துக்கொள்ள உதவியுள்ளார்.

இதன்போது தாமும் தற்கொலை செய்து கொள்வதாக ஏமாற்றியே பாதிக்கப்பட்டவர்களை கொலை செய்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களின் இணக்கத்துடனேயே கொலைகள் இடம்பெற்றிருப்பதால் சிரைசியின் தண்டனையை குறைக்கும்படி அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.

கிருமித் தொற்று: சிம்பாப்வேயில் 30க்கு மேற்பட்ட யானைகள் பலி

கடந்த ஒகஸ்ட் தொடக்கம் 30க்கும் அதிகமான யானைகள் இறந்ததற்கு கிருமித் தொற்றுக் காரணமாக இருக்கலாம் என்று சிம்பாப்வே வனவிலங்குத் துறை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

குப்புறப் படுத்த நிலையில் உயிரிழந்த யானைகள் கண்டுபிடிக்கப்பட்டது, அவை திடீரென் உயிரிழந்திருப்பதை காட்டுவதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தந்தங்கள் அகற்றப்படாத நிலையில் அவை வேட்டைக்காரர்களால் இலக்கு வைக்கப்பட்டிருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று பூங்கா அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு வகை கிருமி விசமானதில் பொட்ஸ்வானாவில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுவரை 34 யானைகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக சிம்பாப்வே பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு முகாமைத்துவ அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இறந்த யானைகளின் உடல்களை பரிசோதித்ததில் சிலதின் கல்லீரல் மற்றும் சில உறுப்புகள் வீக்கமடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கக் கண்டத்தின் 400,000க்கும் மேற்பட்ட யானைகளில் பாதி போட்ஸ்வானாவிலும் சிம்பாப்வேயிலும் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
The Thinakaran
Tamil Daily Newspaper
பம்பாய் யுத்தசமையும் போலீசும்
தினகரன்
ஞாயிறு வெளியீடு
The Thinakaran
Sunday Edition
ஆங்கிலோ-அமெரிக்க உறவை பாதிக்கு
இலங்கைசுதந்திர
தினகரன்
மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப
மாசற்ற ஊடக கலாசாரத்துடன்
தினகரன்
THINAKARAN
தினகரன்
வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
வண்ண
வானவில்
Vanna Vaanavil
குட்டி சுட்டி
முன்பள்ளி சிறுவர், சிறுமியருக்கானது
LAKE HOUSE
லேக்ஹவுஸ்
வெளியீடு
LAKE HOUSE

S.Krishkanthan @ ANCL 2020

18 குளவிக்கூடுகளை கடந்து ஊருக்குள் செல்கின்றோம்

முத்துமலை தோட்ட மக்களின் அவலம்

பூண்டுலோயா நிருபர்

மலையகத்தில் தொடரும் குளவிக் கொட்டு சம்பவங்களினால் பல உயிர்கள் பலியாகி கொண்டிருக்கின்றன. இந்நேரத்தில் பதினெட்டு குளவிக் கூடுகளை கடந்து ஊருக்குள் செல்வதாக முத்துமலை தோட்ட மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மஸ்கெலிய பிரதேச சபைக்குட்பட்ட முத்துமலை தோட்டத்திற்கு செல்லும் வழியெங்கும் குளவிக்கூடுகள் காணப்படுவதாகவும் ஊருக்கு செல்லும் வழியில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு செல்வதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர். முத்துமலை தோட்டத்திலிருந்து மஸ்கெலியா நகருக்கு செல்லும் பிரதான பாதையிலேயே இவை காணப்படுகின்றன. இதனால் நகருக்கு செல்லும் மக்களும், பாடசாலை மாணவர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 20ற்கும் மேற்பட்ட மாணவர்கள் நகர பாடசாலைகளுக்கு இவ்வூரிலிருந்து செல்கின்ற அதேவேளை பல தடவைகள் பாடசாலை மாணவர்களை குளவிகள் துரத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்விடங்களில் தேயிலை மலைகளில் வேலைசெய்வோர் உட்பட பலரும் இக்குளவிகளின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் ராஜ்அசோக்கிடம் வினவிய போது ,

குளவிக்கூடுகளை அகற்றுமாறு ஏற்கனவே பிரதேச சபையில் பிரேரணை கொண்டுவரப்பட்டு பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மஸ்கெலியா பிரதேச சபையோ அல்லது தோட்ட நிர்வாகமோ எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்காமை வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்தார்.

முதலைகளால் பொது மக்கள் அச்சம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நிவித்திகல ஹங்கமுவ கங்கையில் வெள்ளத்தின் பின்னர் இரண்டு முதலைகள் சஞ்சரிப்பதால் இந்த ஆற்றில் இறங்கி நீராடுவதற்கு அஞ்சுவதாக பிரதேச மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்த ஆற்றில் சுமார் 10 அடி நீளமான இரண்டு முதலைகள் சஞ்சரிப்பதால் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்து வந்துள்ளனர். இதனால் ஆற்றில் இறங்கி நீராட அஞ்சுவதுடன் முதலைகள் அச்சம் பகிரங்கப்படுத்தப்பட்டதால் சிறுவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் குறித்து உடவளவை சரணாலய அதிகாரிகள் மற்றும் இரத்தினபுரி உப காரியாலயத்திற்கும் அறிவித்தல் வழங்கியுள்ள போதிலும் இதுவரை அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவிசாவளை – இரத்தினபுரி

ரயில் சேவை நீடிப்புக்காக தண்டவாளங்களுக்கு அருகிலுள்ள குடும்பங்கள் பாதிக்கப்படகூடாது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

அவிசாவளையில் இருந்து இரத்தினபுரி வரையிலான ரயில் சேவையை மீண்டும் நீடிப்பதாக ஏற்கனவே ரயில் தண்டவாளங்களுக்கு இருமருங்கிலும் வசித்து வரும் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நேற்று தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி இணைப்புக் குழு தலைவருமான அகில சாலிய எல்லாவள தலைமையில் நேற்று நடைபெற்ற பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தண்டவாள வீதியின் இரு பக்கங்களிலும் சுமார் 40 வருடங்களுக்கு மேல் வசித்துவரும் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்கமுடியாது.

இவர்கள் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சட்ட விரோதமாக வசித்து வருகின்றனர். இவர்களது பிள்ளைகள் குடும்பத்தினர்களுக்கு செல்வதற்கு வேறு இருப்பிட வசதிகள் இல்லை. எனவே இந்த மக்களை இவ்விடங்களிலிருந்து அகற்ற அனுமதிக்க மாட்டேன். போக்குவரத்து அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இம்மக்களுக்கு பாதிப்பின்றி மீண்டும் ரயில் சேவை அபிவிருத்தி செய்யப்படுமாயின் இவ்விடயத்தில் எனது முழுமையான பங்களிப்பை வழங்குன். இதேவேளை கொழும்பு அவிசாவளை தண்டவாள வீதியில் இரட்டை தண்டவாளங்கள் அமைப்பதில் தாமதங்கள் இருப்பின் அதனையும் சீர்செய்து தரமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச முதியோர் தினம் மடவளையில் அனுஷ்டிப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் 9 ஆவது வருடாந்த நிகழ்வும் சர்வதேச முதியோர் தின வைபவமும் மடவளை மதீனா மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிதிகளாக மடவளை மதீனா மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர். பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக சுதேச வைத்திய பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (டாக்டர்) ஏ.எச்.எம்.மௌஜூத், கௌரவ அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மியும், விசேட அதிதியாக விக்டோரியா மார்கட்டிங் நிறுவனத்தின் தலைவர் தேச கீர்த்தி பௌஸ் ஏ.காதர் அவர்களும் கலந்து கொள்வர்.

காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் முதியோர் கௌரவிப்பு மற்றும் பரிசுப் பொதி வழங்கல் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட முதியோர் கௌரவிப்பு, ஆங்கில பாடத்தில் திறமை காட்டிய மாணவர்களுக்கு வழங்கப்படும் ஜெலீல் டீச்சர் ஊக்குவிப்பு பரிசு, முதியோர்களுக்கான உலர் உணவுப் பொதி வழங்கல் உட்பட பல்வேறு சமூக ஊக்குவிப்பு செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் காலமானார்

இரத்தினபுரி மாவட்டத்தின் முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் நாகசேன பீரிஸ் (வயது 70) நேற்று(29) காலமானார். இவர் கடந்த சில நாட்களாக சுகவீனமுற்று சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே நேற்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இரத்தினபுரி ஹிதலென வீரகொட இலக்கம் 01இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதி கிரியைகள் நாளை(01) மாலை 5;00 மணிக்கு இரத்தினபுரி பொது மயானத்தில் இடம்பெறும்.

பலாங்கொடை மாணவி கொலை விவகாரம் உடற்பாகங்கள் பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

சந்தேக நபர் தடுத்து வைத்து விசாரணை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

படுகொலை செய்யப்பட்ட பலாங்கொடை இந்துக் கல்லூரி மாணவி கே.லோஷினியின் மரணத்துக்கு அவரது தாயின் கள்ளகாதலனே காரணமென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர்களின் தொடர்புக்கு மாணவி எதிர்ப்பு தெரிவித்து வந்தமையாலேயே மாணவி கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இறக்குவானை உக்வத்த பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. சந்தேக நபரை பலாங்கொடை மாஜிஸ்திரேட் நீதவான் ஜயருவன் திசாநாயக்கவின் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டதை தொடர்ந்தே கொலை தொடர்பான முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுமியின் உடற்பாகங்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய வைத்திய பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் சிறுமியின் தாயை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

பலாங்கொடை றை தோட்டத்தைச் சேர்ந்த மாணவியொருவர் கடந்த 22 ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்ததுடன், இவர் துணியால் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட துறை தொழிலாளர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் அதிகரித்துவிட்டன

தலவாக்கலை குறூப் நிருபர்

வெள்ளையர்களால் தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்ட காலத்தை விடவும் தற்போது பெருந்தோட்ட துறை தொழிலாளர்கள் அதிகமான அடக்கு முறைகளுக்கும் அநீதிகளுக்கும் முகம்கொடுத்துவருவதாக சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த காலங்களில் தொழிற்சங்க சட்டங்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பு இப்போது வழங்கப்படுவதில்லை. அன்று வழங்கப்பட்ட பல சலுகைகள் இப்போது வழங்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் தாங்கள் இன ரீதியான பாகுபாட்டுக்கும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்களுக்கும் உள்ளாவதாகவும் உணர்கிறார்கள். தொழிலாளர்கள் தாமாகவே தொழிலிருந்து விலகி செல்லும் நிலை ஏற்படுத்தப்படுவது இன்னொரு அநீதியாகும். நிரந்தர தொழிலாளர்களை விடவும் தற்காலிக தொழிலாளர்களை ஈடுபடுத்தி இலாபம் ஈட்டும் செயலை கம்பனிகள் இலாபமாக செய்துவருகின்றது. தோட்டங்களில் நான்கு வருடங்களுக்கும் மேலான தற்காலிக தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளார்கள். இதன் மூலமாக பெரும் தொகையான தமது தொழிலாளர் நலன்களை தொழிலாளர்கள் இழக்கின்றார்கள். எமது தொழிலாளர்கள் பற்றியும் அவர்களுக்கான தொழிற்சங்க சட்ட அமுலாக்கம் பற்றியும் ஓரளவாவது அக்கறை காட்டி செயற்பட வேண்டும் என்றார்.

தேயிலை கொழுந்துகளை நிறுப்பதற்கு பெண் தொழிலாளர்களை பயன்படுத்த இடமளிக்க முடியாது

மல்வத்தவெளி பெருந்தோட்டக் கம்பனிக்கு செந்தில் தொண்டமான் எச்சரிக்கை

பதுளை மாவட்டத்தில் உள்ள மல்வத்தவெளி பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான ஊவா ஹைலன்ஸ் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்துகளை நிறுப்பதற்கு பெண் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுவதற்கு எதிராக, பிரதமரின் பெருந்தோட்டத்துக்கான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதமரின் பெருந்தோட்டத்துக்கான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்தே அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தேயிலை சாயம் புகைப்படக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த படமொன்றில் தேயிலை மலையில் கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளர்களின் தலைகளில் கம்பு ஒன்று வைக்கப்பட்டு, அந்த கம்பில் திராசை தொங்கவிட்டு கொழுந்துகளை நிறுக்கும் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஊவா ஹைலன்ஸ் தோட்டத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களின் படங்களே இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. இதனைதொடர்ந்து சமூக வலைத்தளங்களிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைதொடர்ந்து இதுதொடர்பில் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுச் செல்லப்பட்டது. இதனையடுத்து இதுத் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ள செந்தில் தொண்டமான், மல்வத்தவெளி பெருந்தோட்டக் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஷானக துமிந்த சமரதிவாகரவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார். மேலும் தொழிலாளர்களை தோட்ட நிர்வாகங்கள் இவ்வாறு நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கொழுந்துகளை நிறுப்பதற்கு பெண் தொழிலாளர்களைப் பயன்படுத்திய மல்வத்தவெளி தோட்ட நிர்வாகத்தின் ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும், கொழுந்துகளை நிறுப்பதற்கு தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்கு மாறாக, மாற்று நடவடிக்கைளை உடனடியாக எடுப்பதாகவும் மல்வத்தவெளி பெருந்தோட்டக் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்துள்ளார்.

கொழுந்துகளை நிறுப்பதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு நாளை செந்தில் தொண்டமான்) நேரடி களவிஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கொழுந்துகளை நிறுப்பதற்கு ஆண் அல்லது பெண் தொழிலாளர்கள் இவ்வாறு பயன்படுத்துவது தொடர்பில் மலையக இளைஞர்கள் தனது கவனத்துக்குக் கொண்டுவரும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுப்பேன் என்றும் செந்தில் தொண்டமான் அறிவித்துள்ளார்.

முதல் தடவையாக புலமை பரிசில் மாணவர்களுக்கு அனுமதி அட்டை

மாணவர் அடையாளக் குறியீடு அறிமுகம்

காரைதீவு குறூப் நிருபர்

இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்க்கு அனுமதிஅட்டை (Admission Card) முதன்முறையாக பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட விருக்கிறது.

இவ் அட்டையில் பரீட்சை எண் மற்றும் விண்ணப்பதாரி பரீட்சை எழுத வேண்டிய பரீட்சை நிலையம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. அப்படியான அனுமதி அட்டை க.பொ.த. சா.தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு மாத்திரமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவந்தது. தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இதுவரை அனுமதி அட்டை முறைமை அமுலில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தகக்து.

ஒரு விண்ணப்பதாரி பரீட்சை அனுமதி அட்டையை காண்பிக்காதவிடத்து பாடசாலை மூலம் வழங்கப்படும் வருகை ஆவணத்தை கொண்டு பரீட்சகரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சை எழுத அனுமதிக்கப்படும்.

மேற்படி பரீட்சை 2020 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பகுதி 1 மு.ப. 09.30 10.30 மணிவரையும் பகுதி 11 11.00 - 12.15மணி வரையும் இடம் பெறும். இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பரீட்சை அனுமதி அட்டை மற்றும் வரவு ஆவணம் என்பன உரிய பாடசாலை அதிபர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வரவு ஆவணம் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் பரீட்சைத் திணைக்களத்தை தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தேசிய மாணவர் அடையாளக் குறியீடு அறிமுகம்.

இதேவேளை இவ்வருடத்திலிருந்து அனைத்து பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கும் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மாணவர் அடையாளக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் கல்வித் தகவல்கள் உட்சேர்க்கப்படும் போது இந்த குறியீடு முக்கியத்துவம் பெறும். எனவே பெற்றோர் அக்குறியீடு உள்ள பகுதியை வேறாக எடுத்து பெற்றோர் அதை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



ஜப்பான் தூதுவர் அகிரா சுக்கியாமா செவ்வாய்க்கிழமை (29) மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவனை அவரது அலுவலகத்தில் சந்தித்து மாவட்டத்தின் நிலைமைகளையும் மாநகர சபை முன்னெடுக்கும் செயல்பாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார். இச்சந்திப்பில் பிரதி மேயர் ஆர்.சத்யசீலன் மற்றும் தூதரக அதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர். படம்: மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

உலக நீர் வெறுப்பு தின விழிப்புணர்வுப் பேரணி

கல்முனை தொற்று நோய்ப் பிரிவின் ஏற்பாட்டில் உலக நீர் வெறுப்பு தின விழிப்புணர்வுப் பேரணி திங்கட்கிழமை கல்முனை நகரில் இடம் பெற்றது.

சுகாதார அமைச்சின் பொது சுகாதார மிருக வைத்திய சேவைகள் பிரிவின் ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் வழிகாட்டலில் 'எல்லா நாய்களுக்கும் நீர் வெறுப்புக்கு எதிராக தடுப்பூசிகளை வழங்குவோம்' எனும் தொனிப் பொருளில் இவ் விழிப்புணர்வு பேரணி நடை பெற்றது. ஒத்துழைப்புடன் செயற்படுவோம், தடுப்பூசிகளை வழங்குவோம், நீர்வெறுப்பினை ஒழிப்போம் எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கல்முனை மாநகர பிரதான வீதியில் இப்பேரணி நடைபெற்றது.

தொற்று நோய் பிரிவின் வைத்திய அதிகாரி டொக்டர் நாகூர் ஆரிப் தலைமையில் நடைபெற்ற இப்பேரணியி ல் பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

காட்டு யானைகளால் மரங்கள் துவம்சம்

மண்டூர் குறூப் நிருபர்

மட்டு. போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திக்கோடை மீள்குடியேற்ற மாதிரிக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் அங்குள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன், உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

காட்டுப் பிரதேசத்திலிருந்து இருபதுக்கு மேற்பட்ட காட்டு யானைகள் மாலை 6 மணியானதும், காடுகளுக்குள்ளிருந்து வெளியில் வந்து திக்கோடை பிரதான பாதையை கடந்து திக்கோடை மாதிரிக் கிராம வீட்டுத்தோட்டம் மற்றும் திக்கோடை கிராம மக்களை தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (27) இரவு கிராமத்திற்குள் உட்புகுந்த காட்டு யானைகள் வீட்டுத் தோட்டங்களிலுள்ள வாழ்வாதார பயிர்ச் செய்கையான தென்னை, மரவள்ளி, மா, பலா, வாழை மற்றும் பயன்தரு மரங்களை அழித்து சேதப்படுத்தியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து தமது கிராமத்தையும் மக்களையும் பாதுகாக்குமாறு கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செய்ய முடியாத நிலை

திருக்கோவில் தினகரன் நிருபர்

தமிழ் மக்கள் தமது உறவுகளுக்கு அஞ்சலி மற்றும் பிரார்த்தனைகளை நடத்த முடியாத நிலைமைகள் கண்டிக்கப்பட வேண்டியது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை திருக்கோவில் விநாயகபுரத்தில் இடம்பெற்று இருந்த கிரிக்கெட் சுற்றுப் போடியின் இறுதி நாள் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி கருத்தினை தெரிவித்து இருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களுக்காகவும் எமது தாயகத்துக்காக உயிர்நீத்த ஒவ்வொருவர்களையும் நாம் நினைவு கூரவேண்டிய கடமைப்பாடுடன் இருக்கின்றோம். நான் அவர்களுக்காக அஞ்சலிகளை செலுத்துகின்றேன் இதனை தடுப்பது என்பது தமிழ் மக்களின் மனங்களில் மீண்டும் மீண்டும் காயங்களையும் கவலையையும் ஏற்படுத்தி வருகின்றன.

நாம் எப்போது தமிழ் தேசியத்துடன் இணைந்திருக்க வேண்டும், தமிழையும் தமிழ் தேசியத்தையும் உயிர் முச்சாகக் கொண்டு என்றும் தமிழுக்காக வாழ்பவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் நான் தொடர்ந்தும் அம்பாறை மாவட்ட மக்களுக்கான என்னால் முடிந்த அபிவிருத்திக்கான பங்களிப்புக்களை முன்னெடுப்பதுடன், அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பேன் என்றும் அவர் மேலும் தெறிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் 3885 ஏக்கரில் நெற் செய்கை

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் இம்முறை பெரும் போக நெற் செய்கை தொடர்பாக தீர்மாமெடுக்கும் விவசாய கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (29) இடம்பெற்ற இக் கூட்டத்தில், பெரும்போக விவசாய கூட்டத்தில் 3885 ஏக்கர் காணியில் பெரும் போக நெற் செய்கைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 25ஆம் திகதி முதல் நவம்பர் 15ஆம் திகதி வரையான காலப் பகுதி விதைப்புக் காலமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கால் நடைகளுக்கான பராமரிப்புக்காக தற்காலிகமான இடமொன்று ஒதுக்கப்படவுள்ளதுடன், கால் நடைகளால் விவசாயத்திற்கு சேதங்கள் ஏற்படுமிடத்து அதற்கான தண்டப் பணங்கள் கால்நடை உரிமையாளர்களிடம் இருந்து கோரப்படும் எனவும் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் வளபரிபாலன இலாகா அதிகாரிகள் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலக அதிகாரிகள் விவசாய கண்டங்களின் விவசாய பிரதி நிதிகள் பண்ணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றிதெரிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

உணர்வு அரசியலுக்கும் தமிழ்த் தேசியத்திற்கு இனி வடக்கு, கிழக்கில் இடமில்லை என்று கூறியவர்களின் முகத்தில் தமிழ் மக்கள் சேறு பூசியுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் திங்கட்கிழமை (28) ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டிருந்த நிலையில், ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, “வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். மக்கள் வழங்கிய பூரண ஒத்துழைப்பினை பார்க்கின்ற போது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

வடக்கு, கிழக்கு முழுவதும், பூரண கடையடைப்பினை மேற்கொண்டுஹர்த்தாலுக்குஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி.

நாட்டில் உயிரிழந்த ஒருவரை நினைவு கூர்வதற்கு, நாட்டு மக்களுக்கு சுதந்திரம் இல்லை.

ஹர்த்தாலுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் பூரண ஒத்துழைப்புகளை வழங்கி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளமையினை பார்க்கும் போது சந்தோசமாகவுள்ளது.

கடந்த தேர்தலில் பலர் பலவிதமான கருத்துக்களை சொல்லியிருந்தாலும், உணர்வு அரசியலுக்கும், தமிழ்த் தேசியத்திற்கு இனி வடக்கு, கிழக்கில் இடமில்லை. தமிழ் மக்கள் அபிவிருத்தியினை மட்டும் தான் விரும்புகின்றனர் என சொன்னவர்களுக்கு இதனை சேறு பூசுகின்ற நிகழ்வாகவே நான் பார்க்கின்றேன்.

ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி தமிழ் மக்கள், தமிழனின் உணர்வுதான் முக்கியம், தமிழ்த் தேசியம் முக்கியம், அபிவிருத்தி என்பது மட்டுமல்ல தமிழ்த் தேசியத்துடன் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பயணிக்கின்றனர் என்ற செய்தியினை தமிழ் பேசும் மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

மேலும் தமிழ்த் தேசியத்தோடு பயணிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட உதவி செயலமர்வு

தோப்பூர் குறூப் நிருபர்

பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான சட்ட உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு செவ்வாய்க்கிழமை (29) மூதூர் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். எஸ்.சமீனா மற்றும் மகளிர் அபிவிருத்தி உதவியாளர் சியாமா ஆகியோரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வளவாளராக ஜவ்சீத் சனாஸ் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் அலாவுத்தீன், மூதூர் சட்ட உதவி ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர் கமலதர்சன் சுபாஜினி, ரெக்டோ நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ.எஸ்.எம்.தாணீஸ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய இளைஞர் கழகங்கள் உருவாக்கும் செயற்திட்டம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் ஊடாக நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் கல்வி கற்கும் 15 வயதுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகளை ஒன்றிணைத்து இளைஞர் கழகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இளைஞர் கழகங்கள், பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மூலம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே.பிரபாகரன் தலைமையிலான குழுவினர், கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மாணவர்களுக்கான இளைஞர் கழகங்களை ஸ்தாபிக்கும் நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.

அதற்கமைய சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில் அதிபர் வி.சஜீந்திரன் தலைமையில் பாடசாலையில் 15 வயது தொடககம் 19 வயது வரையுள்ள மாணவர்களை ஒன்றிணைத்து பாடசாலை இளைஞர் கழகத்திற்கான புதிய நிர்வாகிகளை தெரிவு செய்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து ஏழு இளைஞர் கழகங்களையும், அத்துடன் பிரதேசத்தின் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 29 இளைஞர் கழகங்களையும், அதற்கான நிர்வாக கட்டமைப்புக்களையும் உருவாக்கி வருவதாக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே.பிரபாகரன் தெரிவித்தார்.

வீதி புனரமைப்பு

மண்டூர் குறூப் நிருபர்

கோட்டைக்கல்லாறு கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைமையில் சப்ரிகம திட்டத்தின் கீழ் கோட்டைக்கல்லாறு வெதுப்பக வீதியின் புனரமைப்பு ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்றது.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் வீதி புனரமைக்கப்படவுள்ளதுடன், சமூக மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதன்போது கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விசேட தேவையுடையோர்களுக்கான உபகரணங்கள் சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன. இதன் பிரகாரம் விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி மூதூர் பிரதேச செயலகத்தினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட போது. படம்: தோப்பூர் தினகரன் நிருபர்

நாட்டில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

நாட்டில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தர். சமகால அரசியல் நிலைமைகள் குறித்து திங்கட்கிழமை (28) கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பல்லின மக்கள் வாழுகின்றார்கள் என்பதைத் தற்போதைய அரசாங்கம் உணர்ந்து செயற்படுவதாகத் தெரியவில்லை. எதிர்க் கட்சிகளின் கருத்துகளுக்கும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

'தொல்லியல் இடங்களைக் கண்டறிதல் என்ற போர்வையில், தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து, பேரினமயமாக்கலுக்கான திட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. 20ஆவது யாப்புத் திருத்தம் என்பது மக்களின் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்ற, செயற்பாடாக அமைந்துவிடும்.

எதை விதைக்கிறோமோ அதை அறுக்க வேண்டி வரும். ஐ.தே.கட்சி, ஸ்ரீ.சு.க விதைத்தவற்றை ரணிலும், மைத்திரியும் அறுவடை செய்து நிற்கிறார்கள். இப்போது பொதுஜன பெரமுன விதைக்கிறார்கள். விதைத்தது வினையாக இருந்தால், அறுவடை தினையாகக் கிடைக்காது.

எனவே, சிறுபான்மை இனங்கள் மட்டுமல்ல, சகல முற்போக்கு சக்திகளும் விழிப்புடன் இருந்து வினைத்திறனுடன் செயற்பட வேண்டும் என்றார்.

மட்டக்களப்பில் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான களப்பரிசீலனை

மட்டக்களப்பு குறூப் நிருபர்

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வாவிப் பிரதேசத்தில் சுற்றுலா திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட களப் பரிசீலனை நடைபெற்றது.

மட்டக்களப்பு சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் என். நிரோசன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் கே.சந்திரகாந்தன் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு ஆரம்பமான இந் நிகழ்வில், மட்டக்களப்பு நகரை அண்டிய வாவியிலும் நகரின் வெளிப் பிரதேச வாவியிலும் சூழல் பாதுகாப்புடன் சுற்றுலாவை ஏற்படுத்தும் வகையில் இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வாவிச்சூழலை பயன்படுத்தி பிரதேச மக்களுக்கு நன்மை தரக்கூடியவாறு தொழில்களை ஏற்படுத்தி, அதன்மூலம் வருமானத்தை பெறக்கூடிய வகையில் சுற்றுலா நடவடிக்கை அமையவுள்ளதாக மட்டக்களப்பு சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் என்.நிரோசன் தெரிவித்தார்.

இதன்போது சொறுவாமுனை, நரிப்புல் தோட்டம் உள்ளிட்ட சுற்றுலாவுக்கு பொருத்தமான இடங்கள் இயந்திரப் படகின் மூலம் சென்று பார்வையிடப்பட்டது.

கிழக்கு தமிழர்களின் வாழ்க்கையில் இன்னும் சூரியன் உதிக்கவில்லை

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(கல்லடி குறூப்நிருபர்)

கிழக்கிலே சூரியன் உதிக்கின்றது, இருளை போக்குகின்றது ஆனால் கிழக்கு தமிழர்களின் வாழ்க்கையில் சூரியன் உதிக்கவில்லை இதுதான் உண்மை என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களை புனரமைப்பு செய்வதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று (30) நாவற்குடா இந்து கலாசார மத்திய நிலையத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த அரசியல் நீரோட்டத்தில் தொடர்ச்சியாக நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றோம், நான் சர்வதேச அரசியலைப்பற்றி சிந்திக்க முன்பு எனது மாகாணம், எனது மாவட்டத்தைப் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு வீட்டுக்கு தலைவராக இருக்க தகுதி இல்லாத ஒருவர் ஒரு சமூகத்திற்கு தலைமை தாங்குவதற்கு தகுதியற்றவர் இதுவே யதார்த்த பூர்வமான உண்மை.

அதனாலேதான் எனது மாகாணம் எனது மாவட்டம் தொடர்பில் அதிகம் சிந்திக்க வேண்டி இருக்கின்றது.

இந்த மாகாணத்தில் எமது மக்களுடைய இருப்பு என்பது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதற்கு மிக பிரதான காரண கர்த்தாக்களாக அமைந்தவர்கள் கடந்த கால தமிழ் அரசியல் வாதிகள் என்பதை யாரும் மறக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது .

58.9 வீதமாக இருந்த தமிழர்கள் தற்போது கிழக்கு மாகாணத்தில் 38.6 வீதமாக குறைந்துள்ளனர். ஒரு கிழமைக்கு 18 தமிழர்கள் இனம் மாற்றப்படுகின்றார்கள்.

ஒரு இனத்தினுடைய ஒரு சமயத்தினுடைய கலை, கலாசார பண்பாட்டு அம்சங்கள் மனித விழுமியங்கள் மறுக்கப்படும் பொழுது அதற்கு குரல் கொடுப்பவர்களாக நாங்கள் மாற வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரை சென்று பார்த்தால் இந்து ஆலயங்கள் மட்டும்தான் இருக்கின்றன, ஆனால் அவற்றை சுற்றி தமிழர்கள் வாழ்ந்ததற்கு எந்த அடையாளங்களும் இல்லை. என்னுடைய அரசியல் வாழ்வில் எந்தவொரு இந்து, கிறிஸ்தவ ஆலயத்தையும் அரசியலுக்காக பயன்படுத்தியதே இல்லை. எமது அரசியல் பயணத்தில் எதிர்காலத்திலும் நாம் மதஸ்த்தலங்களை பயன்படுத்தப் போவதுமில்லை, காரணம் இந்துவாக இருந்தாலும் கிறிஸ்தவராக இருந்தாலும் தமிழர்கள் என்ற அடிப்படையில் நாம் போராடிக்கொண்டு இருக்கின்றோம் என்றார்.

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை நளீம் ஹாஜியார் பற்சிகிச்சை நிலையத்திற்கு ஜேர்மனியைச் சேர்ந்த வைத்தியர் மெட் ஸிபில் கேலர் 650,000 ரூபா பெறுமதியான பற் சிகிச்சைக்கான கதிரையொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். அவர் சார்பில் சீனன்கோட்டையைச் சேர்ந்த சமூக சேவையாளர் இர்ஸான் முஹம்மத், பற்சிகிச்சை நிலைய அதிகாரிகளிடம் கதிரையை கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம் : பேருவளைவிசேடநிருபர்)

தமிழ் மொழி கற்பிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை

மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க

வெலிகம தினகரன் நிருபர்

சிங்கள மற்றும் தமிழ் மொழிகள் அரச கருமமொழியாக இருந்தும் தமிழ் மொழி மூலம் கற்பிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக பல பாடசாலைகள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

மாத்தறையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், சிங்கள மொழி மூலம் கற்கின்ற மாணவர்களுக்கு தமிழ் மொழியையும் தமிழ் மொழி மூலம் கற்கின்ற மாணவர்களுக்கு சிங்கள மொழியையும் கற்க முடியாதுள்ளது.எனவே பல்கலைக்கழகம் மற்றும் கல்விக் கல்லூரிகளில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் தமிழ் மொழி மூல 10 தோட்டப் பாடசாலைகள் உள்ளன.எல்லாக் காலங்களிலும் இப்பாடசாலைக்கு சமத்துவம் கிடைப்பதில்லை. இப்பாடசாலைகள் மாகாணசபைகளின் கீழ் உள்ளன.எனினும், சமத்துவம் கிடைப்பது அரிது. ஆசிரிய உதவியாளர்கள் இணைக்கப்பட்டால் ஓரளவு வெற்றிடம் முடிவுக்கு வரும்.

இப்பாடசாலையில் இருக்கும் பாரிய பிரச்சினை ஆசிரியர் பற்றாக்குறையே. இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மாகாண சபைகளின் முறைமை போதுமானதல்ல.

நான் மாத்தறை தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றேன்.அங்கு தரம் இரண்டில் இருந்து தமிழ் மொழி மூலம் கற்பிக்க ஆசிரியர்கள் இருக்கவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

திருமலையில் செயற்கை கால் வழங்கும் நிகழ்வு

திருமலை மாவட்ட விசேட நிருபர்

திருகோணமலையில் நடமாடும் செயற்கை கால்கள் உற்பத்தி முகாம் கொழும்பு கெபிடல் சிட்டி றோட்டரிகழகம் மற்றும் திருகோணமலை றோட்டரி கழகம் ஆகியன இணைந்து கடந்த 25, 26 27 ஆகிய மூன்று தினங்கள், தேவைப்படும் மக்களுக்கு செயற்கை கால்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது. கொவிட் 19 கட்டுப்பாடு காரணமாக முழங்காலுக்குக் கீழே கால்களை இழந்த அங்கவீனர்களுக்கான செயற்கை கால் பொருத்தும் நிகழ்சி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இம் முகாமில் 50க்கு மேற்பட்ட கால்களை இழந்தவர்கள் பங்கேற்றனர். இச் செயற்கை கால்களை வழங்கும் நிகழ்வில் திருக்கோணமலை இராணுவ 22 ஆவது படைப்பிரிவு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய, திருக்கோணமலை நகர பிதா இராஜநாதன், கொழும்பு

கெபிடல் சிட்டி மற்றும் திருகோணமலையின் றோட்டரி கழக செயலாளர் அருள் வரதராஜன் மற்றும் அங்கத்தவர்களும், நண்பர்கள் நீட் சங்கத்தின் உறுப்பினர்கள், பயனாளிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

நண்பர்கள் நீட் சங்கத்தின் மற்றும் றோட்டரி கழக அங்கத்தவர்களின் முயற்சிகளை பயனாளிகள் பாராட்டினர்.

அப்ரார் கல்வி அமைப்பின் மாதாந்த கூட்டம் இன்று

பேருவளை விசேட நிருபர்

பேருவளை, மருதானை அப்ரார் கல்வி அமைப்பின் மாதாந்தக் கூட்டம் இன்று (01) வியாழக்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து பேருவளை, மருதானை, அரப் வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அமைப்பின் அங்கத்தவர்கள் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வீட்டு வேலைவாய்ப்புகளுக்கு, ஓமான் நாட்டிற்குச் செல்கின்ற இலங்கைப் பெண்களின் தொழில் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக, ஓமானில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து

2020.10.01ஆம் திகதி முதல் விசா வழங்கும் புதிய முறையொன்றை அறிமுகம் செய்துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு பணியகத்தின் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்

www.slbfe.lk

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

அனுமதிப்பிரிவு

0112880500/0112864108

24 மணி நேர சேவை

1989

29.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 720,776

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 26,926,150.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 25

NLB

Mega Power

சீட்டிழுப்பு இலக்கம்: 627

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 29/09/2020

N 24 12 19 68 77

	[illegible]	[illegible]	[illegible]
1 ஆம் பரிசு	[illegible]	1,000,000.00	-
2 ஆம் பரிசு	[illegible]	100,000.00	04
3 ஆம் பரிசு	[illegible]	1,000.00	127
4 ஆம் பரிசு	[illegible]	500.00	299
5 ஆம் பரிசு	[illegible]	100.00	7,406
6 ஆம் பரிசு	[illegible]	40.00	4,869
7 ஆம் பரிசு	[illegible]	20.00	120,006
8 ஆம் பரிசு	[illegible]	20.00	21,730

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.51,245,576.80

ரூ.10,516,016.40

ரூ.17,977,138.00

ரூ. 4,446,620.00

சீட்டிழுப்பு இலக்கம் 707

திகதி 2020/09/29

உத்தியோகபூர்வ முடிவுகள்

நீரோகா

லக்கினம் சிம்மம்

வெற்றி இலக்கங்கள் 44 58 59 71

	பரிசு கட்டமைப்பு	பரிசு தொகை	வெற்றியாளர் எண்ணிக்கை
1ம் பரிசு	4 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 1,000,000/-	-
2ம் பரிசு	3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின்	ரூ. 10,000/-	7
3ம் பரிசு	3 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 2,000/-	68
4ம் பரிசு	2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின்	ரூ. 200/-	345
5ம் பரிசு	2 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 100/-	3,596
6ம் பரிசு	1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின்	ரூ. 60/-	4,824
7ம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	ரூ. 20/-	52,484
8ம் பரிசு	லக்கினம் மட்டும் பொருந்துமாயின்	ரூ. 20/-	19,434

ரூ. 2,362,400.00

அடுத்த சுப்பர் பரிசு ரூ. 17,994,155.50

தேசிய லொத்தர் சபை

சீட்டிழுப்பு இலக்கம் : 4260 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 29-09-2020

J 3 5 9 2 9 5

1	3 5 9 2 9 5	2,000,000/-	01
2	5 9 2 9 5	100,000/-	12
3	9 2 9 5	10,000/-	115
4	2 9 5	1,000/-	1,143
5	9 5	100/-	11,436
6	5	20/-	113,412
7	3 5 9 2 9	10,000/-	12
8	3 5 9 2	1,000/-	108
9	3 5 9	100/-	1,138
10	3 5	50/-	11,311
11	J	20/-	45,410

ரூ. 10,720,390.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.17,063,870.00

தேசிய லொத்தர் சபை

www.nlb.lk

கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2555 சீட்டிழுப்பு திகதி 29.09.2020

I 05 12 28 62

1	[illegible]	ரூ. 1,000,000.00	-
2	[illegible]	ரூ. 100,000.00	08
3	[illegible]	ரூ. 2,000.00	203
4	[illegible]	ரூ. 1,000.00	420
5	[illegible]	ரூ. 100.00	10324
6	[illegible]	ரூ. 40.00	6841
7	[illegible]	ரூ. 20.00	171484
8	[illegible]	ரூ. 20.00	31399

220,679

ரூ. 6,989,700.00

ரூ. 66,265,506.00

தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/09/29

சீட்டிழுப்பு இலக்கம் - 322

Y 41 48 61 75

	கட்டமைப்பு	பரிசுகள்	
1 ஆம் பரிசு	[illegible]	1,000,000.00	-
2 ஆம் பரிசு	[illegible]	100,000.00	01
3 ஆம் பரிசு	[illegible]	3,000.00	53
4 ஆம் பரிசு	[illegible]	1,000.00	138
5 ஆம் பரிசு	[illegible]	100.00	3,761
6 ஆம் பரிசு	[illegible]	60.00	2,426
7 ஆம் பரிசு	[illegible]	20.00	62,758
8 ஆம் பரிசு	[illegible]	20.00	11,661

2,407,040.00

80,798

117,871,155.04

NATIONAL LOTTERIES BOARD

சிறு விளம்பரம்



வேலைவாய்ப்பு

காணி/தோட்டம்

325

தொழில்துறை

பொது

பமுணுகம பிரதேசத்திலுள்ள எமது நிறுவனத்தின் லொறி வண்டிகளை நிறுத்தி வைக்கும் பொறித்தொகுதிக்கு பாதுகாப்பு அதிகாரிகள் தேவை. தங்கியிருந்து வேலை செய்ய முடியுமான நபர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுவர். பொலிஸ் அறிக்கை மற்றும் கிராம சேவகர் சான்றிதழ் தேவை. அழையுங்கள் 0777671156, 0777877139. 059417

621

வீடு சொத்து

கண்டி மாவட்டம்

விற்பனைக்கு

காணி விற்பனைக்கு. மறைந்த R.S. பெல்பொலவிற்கு சொந்தமான, பூஜாகொட எஸ்டேட்டில், P.D.பெல்பொல மாவத்தைக்கப்பால் 50 பர்ச்சு காணி, மேலதிகமாக, இரண்டு 50 பர்ச்சு காணித்துண்டுளும் விரைவில் விற்கப்படும். தொடர்பு ரன்ஜித் பெல்பொல 011 2821504 / 077 3251404. 059464

www.adz.lk
it's what you want

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

பிழை திருத்தம்

கேள்விக்கான அழைப்பு

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த சா/த மற்றும் வேறு பரீட்சைகளுக்காக கடித உறைகள் மற்றும் பிரவுன் பேப்பர் வழங்கும் பெறுகை ஒப்பந்த இல:4/10/1/2020(02) 2020 செப்டம்பர் 30ஆம் திகதிய தினகரன் நாளிதழின் 41ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் பந்தி இல 06 கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும்.

முன்பு பிரசுரமான அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விடயங்களிலும் மாற்றங்கள் இல்லை

Lot No	Type	No of Items in the lot
6.	30”x40” Sack Craft Brown papers (GSM 80±2) (250 Papers Nos) Machine Direction - 70±5 Nm/g (Minimum) Cross Direction - 30±2 Nm/g (Minimum)	160 Packets (40,000 papers)

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சை திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.

பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் படியான கூட்டிணைப்பு

எல் ஓ எல் சி ஹோல்டிங்ஸ் பீஎல்சி - பீகிவ் 70 (LOLC) மற்றும் ஐபே (பிரைவேட்) லிமிடெட் - பீபி 3850 பீவி (iPay) ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினால் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவிற்கமைவாக iPay கம்பனியினை LOLC கம்பனியின் முழுமையான துணை நிறுவனமாக கூட்டிணைப்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகிறது. இக்கூட்டிணைப்பின் விளைவாக அனைத்து iPay இனது பங்குகளும் எவ்விதமான கொடுப்பனவோ அல்லது வேறு ஏதேனும் பெறுமதி வழங்கலோ இன்றி இரத்துச் செய்யப்படுவதுடன், LOLC ஆனது iPay இனது அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சுவீகரிக்கும். தொடர்ந்தியங்கும் கம்பனி LOLC ஆகும். LOLC இனது தற்போதைய பணிப்பாளர்களே கூட்டிணைப்பின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாக தொடர்ந்தியங்குவர்.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி, பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பானது இரு கம்பனிகளினதும் சிறந்த ஏற்புடையது என்பதுடன், கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான (LOLC) கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூட்டிணைப்பானது வலுவுக்கு வரும் என்பதுடன், தீர்வுத்திறன் பரிசோதனையினையும் திருப்திப்படுத்தும் எனக் கருதுகின்றனர்.

இக்கூட்டிணைப்பானது 2020 ஒக்டோபர் 29ஆம் திகதியன்று அல்லது கம்பனிகளின் பொதுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நாள் தொடக்கம் வலுவிற்குவரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
எல் ஓ எல்சி கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
எல் ஓ எல்சி ஹோல்டிங்ஸ் பீஎல்சி மற்றும் ஐ பே (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் செயலாளர்
2020 ஒக்டோபர் 01

இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்

மஹவெவ, இஹல மஹவெவ, ‘தெலிசிங்க நிவாஸ’ இல: 336 என்ற விலாசத்தில் வசிக்கும் தெலிசிங்க முதியன்சலாகே வசித ராஜா தெலிசிங்க ஆகிய நான் சிலாபம் பகிரங்க நொத்தாரிஸ் மனோகரி உக்கத ராஜபக்ஷ அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்திய இல: 7353 மற்றும் 2000.01.11ந் திகதியிடப்பட்ட, தெலிசிங்க முதியான்சலாகே துசித ராஜா தெலிசிங்க அவர்களுக்கு என்னால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்வதாக, இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

பெறுகை அறிவித்தல்

சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை, பேராதனை

வளிச்சீராக்கி வலையமைப்பை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்

பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையில் 2020/21ஆம் வருடத்திற்காக வளிச்சீராக்கி வலையமைப்பை பராமரித்து மற்றும் புதுப்பிப்பதற்காக, தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

i. Central air conditioning system
ii. splittype air conditioning system

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக (NCB) விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு வெற்றியாளரான அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) தரம் EM4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒவ்வொரு வளிச்சீராக்கி வலையமைப்பு தொடர்பாகவும் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத விலைமனுப் பத்திரக் கட்டணம், ஒப்பந்தமொன்றிற்காக ரூ.2000.00 ஆகும் அது ரொக்கப்பணமாகச் செலுத்தப்பட்டு மற்றும் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், 2020.01.01 முதல் 2020.10.14 வரையான அலுவலக தினங்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
04. விலைமனுப்பிணையின் பெறுமதி ஒப்பந்தமொன்றிற்கு ரூ.10,000.00 ஆகும். விலைமனுப் பிணையுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணம் முத்திரை பொறிக்கப்பட்ட, தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு, இடதுபக்க மேல் மூலையில் “................. வளிச்சீராக்கி வலையமைப்பைப் பராமரித்து மற்றும் புதுப்பித்தல் 2020/2021 தொடர்பான விலைமனுக்கள்” எனக் குறிப்பிடப்பட்டு, பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டிக்குச் 2020.10.15 அன்று பி.ப.2.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படவோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
05. விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடைந்தவுடன் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்க்கு அல்லது அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்குக் கலந்துகொள்ளலாம். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. இது தொடர்பான முன்னோடி விலைமனுக்கூட்டம், 2020.10.17 அன்று மு.ப.10.30 மணிக்கு பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.
08. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்குரியதாகும்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
சிறிமாவோ பண்டாரநாயக்க
விசேட சிறுவர் வைத்தியசாலை, பேராதனை.

0812389110 நீடிப்பு 2621 2020.10.01

ஜா-எல பிரதேச சபை

பெறுகைக்கான விலைமனுக் கோரல்

பின்வரும் அட்டவணையில் காணப்படும் கைத்தொழில்களை மேற்கொள்வதற்காக, 2020.10.23 அன்று மு.ப. 10.00 வரை என்னால் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பெறுகை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதற்கு CIDA நிறுவனத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஆகக் குறைந்த தரம் பின்வரும் தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரமாகவிருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று செல்லுபடியாகும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. ஜா-எல பிரதேச சபையில் படிவக் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவங்களில் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். விலைமனுப் படிவங்கள், 2020.10.12 அன்று பி.ப. 2.00 வரை வழங்கப்படும்.
3. வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை மாத்திரம் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
4. கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது விலைமனுப்பிணையம் [(+77) நாட்களுக்குச் செல்லுபடியாகும்] விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து திருத்தங்களினதும் முன்னால் தம் குறும் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவற்றை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், நிறுவனத்தின் பெயர், மற்றும் மூலப்பிரதி, நகல் பிரதி எனவும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, விலைமனுக்கள், ‘தலைவர், ஜா-எல பிரதேச சபை’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற் சேர்க்கப்படல் வேண்டும்.
8. 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு ஜாஎல பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் விலைமனுதிறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
9. விலைமனுவை அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானம், இறுதித்தீர்மானம் என்பதனைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.
10. பெறுகை விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு, அறவிக்கப்பட்ட தினத்தன்று பெறுகைப் பெறுமானத்தின் 5% இற்குக் குறையாத தொகையை வைப்புச் செய்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும் அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் அவர்களின் பிணைத்தொகை சபைக்கு உரித்தாக்கப்படும், பதிவு இரத்துச் செய்யப்படும்.
11. கைத்தொழிலைச் செய்து முடிவுறுத்துவதற்காக வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அக்கருமத்தை முடிவுறுத்தாத ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும். அவர்கள் மீண்டும் இச்சபையின் கைத்தொழில்களிற்காக பெறுகை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாது.

மேலதிக விபரங்களை, ஜா-எல பிரதேச சபையின் செயலாளரிடம் அல்லது வேலை அத்தியட்சகரிடம் அறிந்து கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 0112-246051

தொடர் இலக்கம்	கைத்தொழில்	படிவக் கட்டணம்	விலைமனுப் பிணையகம்	காலம்	CIDA
01	பட்டுவத்த உப அலுவலகம் மற்றும் நூலகம் நிர்மாணித்தல்	10,000.00	90,000.00	03 மாதங்கள்	C5
02	அண்ணாசிஹேன முன்பள்ளிக் கட்டிட நிர்மாணம், படிநிலை 01	5,000.00	35,000.00	03 மாதங்கள்	C6

ஜா-எல பிரதேச சபை
அலுவலகம்,
கந்தான.
2020.09.18

எம்.ஏ. சந்ரபால மதுரப்பெரும
தலைவர்,
ஜா-எல பிரதேச சபை.

ஜா-எல பிரதேச சபை, கந்தானை

பெறுகை விலைமனுக் கோரல் – 2020

ஜா-எல பிரதேச சபையின் நவீன புறநெகும இரண்டு மாடிக் கட்டிடத்தின் பின்வரும் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலைமனுக் கோரப்படுகின்றது.

1. கட்டிடத்தின் அலுவலகத் தொகுதியைப் பிரிவுகளாக (PARTITION) பிரித்தல்
2. அலுவலக கணனித் தொகுதி மற்றும் ஏனைய பிரிவுகளிற்காக மின்சாரக் கட்டமைப்பைச் சீரமைத்தல்.
3. கட்டிடத்தின் தேவையான அமைவிடங்களிற்கு கணனி இணைய வலையமைப்பை நிறுவுதல்.
4. கட்டிடத்தின் தேவையான பிரிவுகளில் உள்ளகத் தொலைபேசி வலையமைப்பை நிறுவுதல்.
5. கட்டிடத்திற்குத் தேவையான மேசை, கதிரை போன்ற அலுவலக உபகரணங்களை வழங்கல்.

✓ விபரக் குறிப்புக்களுடன் கூடிய விலைமனுப் படிவத் தொகுதியொன்று 2020.10.02 முதல் 2020.10.08 வரை வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை ரூபா 5000.00 ஐ செலுத்திய பின்னர் வழங்கப்படும்.

✓ உருப்படியொன்றிற்காக மீளளிக்கப்படும் அரச வைப்புத் தொகை ரூபா 10,000.00 செலுத்தப்படல் வேண்டும்.

✓ உருப்படியொன்றிற்காக மீளளிக்கப்படாத அரச வைப்புத் தொகை ரூபா 4000.00 செலுத்தப்படல் வேண்டும்.

✓ சேவைகளிற்கான பொறுப்புக் கூறுங்காலம் மற்றும் வருடாந்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

✓ மேற்படி உருப்படிகளிற்காக கட்டிடத்தைப் பரிசீலனை மேற்கொண்ட பின்னர் விலைமனுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

◆ விலைமனுக்களுடன் உமது முன்னைய வழங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

◆ விலைமனுச் சமர்ப்பிக்கும் நிறுவனமானது, நேரடியாகச் சேவை வழங்கும் நிறுவமொன்றாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இன்றேல் அந்நிறுவனமானது, பரிசீலனையின் போது நீக்கப்படும்.

◆ விலைமனுச் சமர்ப்பிக்கும் நிறுவனமானது, நிலைபேறான தொலைபேசி இலக்கம்/(VAT) பெறுமதி சேர் வரிக்கான பதிவு இலக்கம்/ மின் அஞ்சல் முகவரி/ வியாபாரப் பதிவு போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

◆ மேற்படி உருப்படி 5 இன் வழங்கல்கள் மற்றும் சேவை வழங்கல்களிற்காக ஒரே நிறுவனமானது, விமைனுச் சமர்ப்பிப்பதன் காரணமாக சபைக்கு ஏற்படும் இழப்புகள் மற்றும் நட்டங்களைத் தடுத்துக் கொள்ளலாமென்பதுடன், அதற்காக பரிசீலனையின் போது முக்கியத்துவம் அளிக்கப்படும்.

◆ மேற்படி விடயங்களிற்கமைவாக, உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக தலைவர்/ செயலாளர், ஜா-எல பிரதேச சபை, கந்தானை” என்ற முகவரிக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்த்து அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், அவை நகல் பிரதியொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நகல் பிரதி உள்ளடக்கப்படும் உறையில் நகல் பிரதி என்று குறிப்பிடுதல் வேண்டும். மேலும் மூலப்பிரதிகள் மற்றும் நகல் பிரதிகளில் விலைமனுக் கோரும் உருப்படியின் இலக்கம் மற்றும் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

◆ நேரடியாக ஒப்படைக்கப்படும் விலைமனுக்கள் சபையில் வைக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

◆ விலைமனுத் திறத்தல் 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு நடைபெறுவதுடன். அவ்வேளையில் உங்களின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

தலைவர்,
ஜா-எல பிரதேச சபை,
கந்தான.
2020.09.24

ஜா-எல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில்.

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact MANAGER FRONT OFFICE Hotline 1949
LAKE HOUSE

“நோய்த்தொற்றுப் பேரிடர் இடையே : முதியோர்களின் சவால்கள்”

சர்வதேச முதியோர் தினம்

2020, ஒக்டோபர் 1



பிரதமரின் ஆசிச் செய்தி...

ஒக்டோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதினை முன்னிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

முதுமைப் பருவத்தை அடைதல் உயிரியல் சார்ந்த ஓர் விஞ்ஞான மாற்றமாகும். அது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான ஒன்று என்பது போலவே அது யதார்த்த பூர்வமான நிகழ்வாகக் கருதலாம். முதியோர்கள் தொடர்பில் சமூகவியல் அணுகுமுறை காலத்திற்குக் காலம், சமூகத்திற்குச் சமூகம் மற்றும் கலாசாரத்திலிருந்து இன்னொரு கலாசாரத்திற்கு ஏற்ப வேறுபடும். இலங்கையில் முதியோர்களின் சனத்தொகை துரிதமாக வளர்ச்சியடைந்து வருவது போலவே 2030 ஆம் ஆண்டு ஆகும் போது கணிசமான அளவில் அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்டுகின்றது. துரிதமாக அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகை இலங்கையின் எதிர்காலத்திற்கு சவாலாகக் காணப்படாத வகையில் வேலைத் திட்டங்கள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அதிகரிக்கும் முதியோர் சனத்தொகை காரணமாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு மூலோபாயங்களை ஆராய்ந்து சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் முதியோர் தொடர்பிலான அனுபவங்களினை ஒன்றிணைத்து நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உள்ளடக்கிக் கொள்வதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும் ஓர் சூழலை உருவாக்குதல் அவசியமாகும். செழிப்பான தூரநோக்குக் கொள்கைகளினூடாக சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் அதற்கு அவசியமான நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் முதியோர்களுக்காக வேண்டி அரசின் கடமைகள் குறையேதும் ஏற்படா வண்ணம் அயராது செயற்படும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் அதனது சேவையினை செயற்திறனுடன் செயற்படுவதற்கு மென்மேலும் ஆற்றல் பெறட்டும் என மனமார்ந்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

தமது பிள்ளை பேறுகளுடன் தேசத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து ஊக்குவித்து இன்று தமது வாழ்வின் அந்திம பொழுதைக் கழித்த வண்ணம் இருக்கும் தேசத்தின் அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் துன்பங்கள் ஏதுமற்ற ஆரோக்கியம் மிகுந்த நீண்ட ஆயுள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர்

திறைசேரி நிதியின் மூலம் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள்

01. திரைசேரி நிதியின் மூலம் செயற்படுத்தும் வேலைத் திட்டம்
02. கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதல்
03. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்துதல்
04. முதியோர் அடையாள அட்டை வழங்குதல்.
05. முதியோர்களுக்கான சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள் (ஆரோக்யா - முதியோர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் புற்று நோய்க்கான நிகழ்ச்சித்திட்டம்
06. முதியோர் இல்லங்களுக்கான கட்டட நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல், பராமரித்தல், தரநிர்ணயம் செய்தல், பதிவு செய்தல்.
07. முதியோர்களுக்கு சுயதொழில் வழங்குதல்.
07. சிரேஷ்ட பிரஜைகளின் விலைமதிப்பற்ற அறிவை சமூக முன்னேற்றத்திற்காக பங்களிப்பாகப் பெற்றுக் கொள்ளல்.
08. தடகள விளையாட்டுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்.
09. முதியோர்களுக்கான பராமரிப்பு சபையினை நடாத்தி வருதல்.
10. குறைந்த வருமானம் பெறும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூபா. 2,000.00 கொடுப்பனவு வழங்குதல்.

முதியோர் சமூக பாதுகாப்பு நலன்புரி நிதியின் மூலமாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள்

01. முதியோர் இல்லத்தின் கட்டட நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம்.
02. முதியோர் சுகாதார நிகழ்ச்சித் திட்டம்
03. கண்வில்லை மற்றும் செவிப்பறை உபகரணங்கள் வழங்குதல்.
04. மருத்துவ முகாம் நடாத்துதல்.
05. பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
06. “சுரக்கும்” நிகழ்ச்சித் திட்ட வேலைத் திட்டம்.
07. பிரதேச மீள்சுழற்சிக் கடன் ஆலோசனைத் திட்டம்
08. கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதல்.
09. வசதி வழங்குதல் நிதி உதவித் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு குறைந்தபட்ச வசதிகளை வழங்குதல்.
10. பிரதேச செயலக மட்டத்தில் தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள்.
11. முதியோர் சுற்றுலா நிகழ்ச்சிளை ஏற்பாடு செய்தல்.

“நோய்த்தொற்றுப் பேரிடர் இடையே :
முதியோர்களின் சவால்கள்”
சர்வதேச முதியோர் தின
விழா - 2020
சர்வதேச முதியோர் தினம்
கொண்டாடப்படும் தேசிய நிகழ்வு
கௌரவ சுகாதார அமைச்சர்
பவித்ராதேவி வன்னி ஆராச்சி அவர்களின்
தலைமையில்
நாடு பூராகவும் பரந்து வாழும்
அன்பான முதியோர்களின் பங்குபற்றலுடன்
நாடு பூராகவும் பரந்து வாழும்
அன்பான முதியோர்களின்
பங்குபற்றுதலுடன்...

2020.10.01 ஆம் திகதி
மு.ப 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணி வரை

இலங்கை மன்றக் கல்லூரியில்
நடைபெறும்

செயலாளரின் ஆசிச் செய்தி

ஒக்டோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் 2020 ஆம் வருடத்திற்கான முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் சர்வதேச முதியோர் தின விழா தொடர்பில் ஆசிச் செய்தியினை வழங்குவதனை முன்னிட்டு அதனை ஒரு பாக்கியமாகக் கருதி பெருமிதம் அடைகின்றேன்.

உலகில் துரிதமாக அதிகரித்துவரும் முதியோர்களின் சனத் தொகையானது எதிர்கால உலகின் சவாலாகக் கருதப்படுகின்றது. அவ்வாறான சவால்களின் இடையே துரித வளர்ச்சி அடைந்து வரும் நாடான இலங்கையானது தெற்காசிய பிராந்தியத்தில் முதியோர்களின் சனத்தொகை துரிதமாக அதிரித்து வரும் நாடாக அறியப்பட்டுள்ளது. “முதியோர் என்போர் சமூக முன்னேற்றத்திற்காக தொழிற்பட்ட முன்னோடிகளாவர்” அவர்களைப் பராமரிப்பது எமது தேசிய கடப்பாடாகும்.

நடைமுறையில் நாம் வாழ்கின்ற இன்றைய உலகம் நிர்மாணம் பெற்றுள்ளது முதியோர்களின் வலிமையினாலாகும். அவர்களுக்கு நன்மை பயக்கும் மற்றும் பலாபலனுடன் கூடிய வாழ்வியல் முறையொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல் தேசிய கடமையாகும். அந்த வகையில் அதற்காக வேண்டி 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் நிறுவப்பட்டுள்ளது. என்பது குறிப்பிடத்தக்க விசேட அம்சங்களாகும்.

இலங்கையில் காணப்படும் முதியோர்களின் சனத்தொகை கணிப்பீட்டின் படி 2015 ஆம் ஆண்டளவில் 14% ஆக இருந்த முதியோர் சனத்தொகையானது 2040 ஆம் ஆண்டாகும்போது நாடளாவிய சனத்தொகை கணிப்பீட்டில் 25% வீதம் வரையில் வளர்ச்சியடையும் என சனத்தொகை கணிப்பீட்டின் படி எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தேசிய ரீதியிலான கடமைகளை புரிந்து வருவது சிரேஷ்ட பிரஜைகளுக்கே உரித்தான முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் ஆகும்.

வாழ்வின் இறுதிக்காலப் பொழுதை கழித்திடும் சிரேஷ்ட பிரஜைகளாக முதியோர்கள் அவர்களது எதிர்கால வாழ்வினை மகிழ்வுடன் மற்றும் அர்த்தம் மிகுந்த ஒன்றாக கழிப்பதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அதற்குத் தேவைப்படும் சேவைகளைப் புரிவதற்கும் கிராமிய மட்டத்தில் அவர்களைப் பலப்படுத்துவதற்கும் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் இது வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் முதியோர்களைப் பலப்படுத்தும் வகையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுகள், முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை முறை, இலங்கை பூராகவும் நாடளாவிய ரீதியில் பிரதேச மட்டங்களில் முதியோர் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளமை. 70 வயதினைப் பூர்த்தி செய்த சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் ரூபா. 2,000.00 கொடுப்பனவு, சிரேஷ்ட பிரஜைகளுக்கான நலன்புரிச் சேவைகள், முதியோர்களுக்கான சுய தொழில் நிதி உதவிகளை வழங்குதல் மற்றும் 100 வயதினைப் பூர்த்தியான அனைத்துப் பிரஜைகளுக்கும் ரூபா. 5,000.00 கொடுப்பனவு வழங்குதல் என்பவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். மேலும் முதியோர்கள் நாட்டில் பயனுள்ள செல்வமாக மாற்றுவதற்கும் அவர்களது வாழ்க்கை இனிமையானதாக கழிப்பதற்கும் வேண்டிய வேலைத் திட்டங்கள் பலவற்றை எதிர்காலத்தில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 01 ஆம் திகதி நடைபெறும் சர்வதேச முதியோர் தினத்தைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சின் மனித வள மற்றும் பௌதீக வள முதியோர்களுக்கான நலன்புரிகள் தொடர்பில் வழங்குவதற்கு முடியுமாக இருத்தல் என்பது பெரும் பாக்கியம் எனக் கருதுவதோடு, இத் தேசிய நிகழ்வை மிகச் சிறந்த வகையில் நடாத்தி முடிக்க ஒன்று சேர்த்து கைகோர்த்துச் செயற்பட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

வைத்தியர் எஸ்.எச். முனசிங்ஹ,
செயலாளர், சுகாதார அமைச்சு.

அமைச்சரின் ஆசிச் செய்தி...

“நோய்த் தொற்றுப் பேரிடர் இடையே முதியோர்களின் சவால்கள்” எனும் கருப்பொருளினூடாக சர்வதேச முதியோர் தினம் 2020 ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இலங்கையின் சர்வதேச முதியோர் தின வைபவத்தினை முன்னிட்டு ஆசிச் செய்தியினை வழங்குவதற்காக கிடைத்த இப்பொன்னான சந்தர்ப்பத்தை நினைத்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாள்தோறும் அதிகரித்துவரும் முதியோர்களின் சனத் தொகையின் வளர்ச்சிக்கு ஏற்ப முதியோர்களுக்கான சேவைகள் விரிவடைய வேண்டும். சனத்தொகை மதிப்பீடுகளின் படி உலக சனத்தொகையில் 11% வீதமான அளவில் 60 வயதினைப் பூர்த்தியானவர்கள் காணப்படுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இதில் தெற்காசிய வலயத்தில் அதிகமான முதியோர்கள் வாழும் நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ள அதேநேரம் தேசத்தின் முதியோர் சனத்தொகை மேலும் அதிகரிக்கும் பெறுபேற்றை நாம் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் முன் ஆயத்தமென்ற வகையில் நடவடிக்கைகள், செயற்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான வேலைத் திட்டங்களை சிரேஷ்ட பிரஜைகளுக்கென, முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் ஆகியவற்றிற்கு உரித்தானது என்பதோடு, குறித்த நிறுவனங்கள் இரண்டிற்கும் மிக முக்கியமான பணிகளை மேற்கொள்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது. முதியோர்களுக்கான தேசிய செயலகம் இலங்கை அரசின் மூலம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்ற ரீதியில் வரைவிலக்கணப்படுத்தலாம்.

பிறப்பு வீதம் குறைவடைதல், சுகாதார வசதிகள் மற்றும் மருத்துவ அறிவியில் முறையான முன்னேற்றத்தின் காரணமாக கடந்த மூன்று தசாப்தங்களில் நாட்டின் ஆயுள் எதிர்பார்ப்பானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதுடன் நாட்டில் அதிகரித்துவரும் முதியோர் சனத்தொகை தொடர்பில் முகங்கொடுப்பதற்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதனூடாக, அவர்களின் சுகாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதனூடாக நாட்டின் சுகாதார கட்டமைப்பு விருத்தியடைய வேண்டியது அவசியமான ஒன்றாகும். நோய்த்தொற்றுக்களின்போது பீடிக்கப்படும் உடல் அவயவங்கள் மற்றும் உடற்தொகுதிகள் பல்வேறு நோய் நிலைகளுக்கு ஆட்படும் வாய்ப்பு மிக அதிகமாக காணப்படுவதன் காரணமாக முதியோர்கள் ஆரோக்கியமாக காணப்படுவது மிக அவசியமான ஒன்றாகும்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் “சௌபாக்கிய நோக்கு” கொள்கைப் பிரகடனத்திற்கேற்ப கௌரவத்திற்குரிய சிரேஷ்ட பிரஜைகளைக் கொண்ட சமூகம் ஒன்றிற்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெற்றோரை பராமரித்தல் ஆரம்ப காலந்தொட்டு எமது பண்பாட்டு கலாசாரத்தில் விசேடமான ஓர் அங்கமாக காணப்படும் ஓர் வழக்காறாக காணப்படுகின்றது. சிரேஷ்ட பிரஜைகள் என்போர் எமக்கு எந்த வகையிலும் புறக்கணித்து, கவனிப்பற்று உதாசீனப்படுத்த முடியாத ஓர் அங்கத்தினர் என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. தமது, வாழ்நாள் பூராகவும் தமது அறிவு சார்ந்த திறமைகள் மற்றும் உழைப்பு நாட்டின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த முதியோர்களின் வாழ்வின் அந்திம காலப்பகுதியில் ஓய்வாகவும், சந்தோசமாகவும், தமக்கும், நாட்டிற்கும் பிரயோசனமாக வாழ்வை கழிப்பதற்குத் தேவையான பாதையை அமைத்துக் கொடுத்தல் எம் அனைவரதும் கடமையாக இருப்பது சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும். சர்வதேச முதியோர் தினத்திற்காக ஏற்பாடு செய்துள்ள இலங்கையின் தேசிய வேலைத் திட்டத்திற்கு மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்தை கூறுவதோடு இந்நிகழ்வு மிகச்சிறப்பாக நடக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

சட்டத்தரணி பவித்ரா வன்னியாரச்சி
சுகாதார அமைச்சு

பணிப்பாளரின் ஆசிச் செய்தி

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் தேசிய முதியோர் தினத்தை ஒட்டி வாழ்த்தக் கிடைத்தது பெரும் அதிர்ஷ்டமாகும். “நோய்த் தொற்றும் பேரிடர் இடையே முதியோர்களின் சவால்கள்” என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்ற முதியோர் தின தேசிய விழா கௌரவ சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி அவர்களின் தலைமையில் கொழும்பு 07 மன்றக் கல்லூரியில் பெருமையுடன் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றினால் உலகெங்கும் பாதிக்கப்பட்டிருக்கும் மில்லியன் கணக்கான மக்கள் மற்றும் உயிரிழந்த இலட்சக் கணக்கானவர்களின் பெரும்பாலானவர்கள் முதியோராக இருப்பது எம் எல்லோருக்கும் தெரிந்த அவலமாகும். என்றாலும் இலங்கையர்களாக எமது முதியவர்களான நீங்கள் உட்பட முழு நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக அதிமேதகு ஜனாதிபதி முதற்கொண்டு அரசு, சுகாதாரத் துறை, பாதுகாப்புத் துறை மேற்கொண்ட அர்ப்பணிப்பு இம்முறை முதியோர் தின தொனிப்பொருளுடன் பார்க்கும்போது முக்கியமாக கௌரவத்துடன் நினைவுகூர வேண்டிய விடயமாகும்.

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமையை பாதுகாக்கும் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தத்தின் மூலம் முதியோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு காரணமான முதியோருக்கான தேசிய சபை நிறுவப்பட்டதும் அதன் பணிகளை மேற்கொள்வதில் அதற்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த நடவடிக்கையாகும். இதன் இலக்குகளில் முதியோர் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தி, அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக கொள்கைகள் தயாரித்து செயற்படுத்தல், அவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் அனுபவத்தை பயன்படுத்தி சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தல், ஆரோக்கியமான முதியோர் சமூகம் ஒன்றை ஏற்படுத்தல், குறைந்த வருமானம் கொண்ட முதியவர்களுக்காக வழிகாட்டல் மற்றும் நலன்புரி செயற்பாடுகள் மற்றும் முதியோருடன் தொடர்புபட்ட தகவல்களை புதுப்பித்தல் ஆகியன முக்கியமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த பணிகளை மிகவும் பயன்தரக்கூடிய வகையில் மேற்கொள்வதற்காக வருடாந்தம் திறைசேரி மூலமும் முதியோர் சமூக பாதுகாப்பு அறக்கட்டளை மூலமும் நிதிப் பங்களிப்புகள் பெறப்படுகின்றன.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்ச நோக்கு அரசின் கொள்கை பிரகடனத்தின் மூலம் கௌரவம் மிக்க மூத்த குடிமக்களின் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்காக பரந்த செயற்திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது. இதன் கீழ் அடையாளம் காணப்பட்ட அனைவருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு தமது வாழ்க்கை அனுபவம் மற்றும் வரலாறு தொடர்பில் அறிவை பெற்றுக்கொடுத்து மூத்த குடிமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக “தன்னார்வ சேவை செயலணி” ஒன்றினை ஆரம்பிப்பது, உற்பத்தி பணிகளுக்கு பங்களிப்பை பெறுவதற்கு அரச மற்றும் தனியார் துறைகள் ஒன்றிணைந்த வாழ்வாதார அபிவிருத்தி பயிற்சி ஒன்றுக்கு தேவையான வளம் மற்றும் சந்தையை அறிமுகப்படுத்தல், பெற்றோருக்கு பாதுகாப்பை வழங்குகின்ற புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்தல், முதியோர் இல்லங்களின் தரத்தை உயர்த்துதல் மற்றும் அதற்காக தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற ஆலோசனைகள் தேசிய சபை மற்றும் செயலாளர் அலுவலகம் மூலம் மேலும் பலப்படுத்தி செயற்படுத்தல் மிக முக்கிய பணியாக பார்க்கின்றேன்.

தற்போது ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 16.04% ஆன மூத்த குடிகள் மேலும் இருபது ஆண்டுகளில் நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையாக முதியோர் காணப்படுவர் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. தற்போதே அதற்கு முகங்கொடுப்பதற்கு ஏற்றதொரு சூழலை செய்து செயற்படுத்துவது நாட்டின் அபிவிருத்தி இலக்கை வெற்றி கொள்வதற்கு பெரும் உந்துதலாக அமையும் என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்வோம். உங்கள் அனைவருக்கும் கவலையற்ற, ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கும் பிரார்த்திக்கின்றேன்.

சந்தன ரணவீர ஆரச்சி
பணிப்பாளர் (பதில் கடமை),
முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் பணிப்பாளர்

தொலை நோக்கு

“இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்”

பணிக்கூற்று

“முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புரிய வைத்தல்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம்
சுகாதார அமைச்சு

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாண

தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடத்திற்கு வடக்கு, கிழக்கு இளைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

கேகாலை மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கேகாலை மாவட்ட தமிழ் மொழி கல்வி அதிகாரிகளின் மற்றும் அதிபர்களின் சந்திப்பின்போது ஆளுநர் இதனை தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண தமிழ் மொழி ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு மாகாணசபை அடிக்கடி விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அதற்காக போதிய அளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையினால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தகுதியான இளைஞர் யுவதிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவர்களுக்கு நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இம்மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக சப்ரகமுவ மாகாண சபை மூலம் அடிக்கடி விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் போதிய அளவு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாமையினால் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து விண்ணப்பங்கள் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் 102 தமிழ் மொழி மூல பாடசாலைகளில் உள்ளன என அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 27 வருட காலம் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற முன்னாள் ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர் ஏ. மொஹமட் தம்பியின் சேவை நலன் பாராட்டு விழா பாராளுமன்றக் குழுஅறையில் அண்மையில் நடைபெற்றது. மொஹமட் தம்பிக்கு நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் அருகில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம், ஹன்சாட் பதிப்பாசிரியர் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்

மறைந்த எஸ்.பி.பாலசுப்ரமணியம், சிவாஜி கணேசன் நினைவு தினம் அனுஷ்டிப்பு

அக்குறணை குறூப் நிருபர்

மறைந்த கலைஞர்களான எஸ்,பி. பாலசுப்ரமணியம், சிவாஜி கணேசன் ஆகியோருக்கு கம்பளையில் இன்று நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. சபாயர் ஹில்ஸ் வரவேற்பு மண்டபத்தில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கம்பளையைச் சேர்ந்த கலைஞர்கள் பலரது பங்குபற்றுதலுடன் இது இடம் பெறுகிறது.

பஸ் விபத்து

பதுளை தினகரன் நிருபர்

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வீதியை விட்டு வடிகானுக்குள் வீழ்ந்து விபத்திக்குள்ளானதில் இருவர் காயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று (30) புதன் கிழமை காலை 7.50 மணியளவில் பஹாலிஎல – அம்பவக்கவளைவில் நிகழ்ந்துள்ளது.

பஸ் சாரதியின் புத்திசாதுரியத்தால் பள்ளத்தில் விழ்ந்து ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டாரவளையிலிருந்து நெலுவ வழியாக பதுளை நோக்கி வந்த பண்டாரவளை டிப்போவுக்குச் சொந்தமான இ.போ.ச. பேருந்தே இவ்வாறு சாரதி பக்கத்து இரு டயர்களும் வலப்புறமிருந்த வடிகானுக்குள் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது. பஸ்சில் ஏற்பட்ட இயந்திர கோளாரே விபத்துக்கான காரணமென தெரியவந்துள்ளது.

இவ் விபத்துக் குறித்து ஹாலிஎல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இராணுவத்தின் 71ஆவது வருட நிறைவு வைபவத்தின் ஆரம்ப நிகழ்வாக இராணுவத்தின் கொடியை கண்டி தலதா மாளிகைக்கு ஊர்வலமாக கொண்டு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதன் போது இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையிலான உயர் அதிகாரிகளிடம் குழுவினர் கொடியினை ஒப்படைத்தனர். இக்கொடி புத்தபெருமானின் புனிதப் பல் உள்ள பேழையில் வைத்து வழிபாடுகள் செய்யப்பட்டது. படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

சுகாதார பிரச்சினைகளால் தொழிலாளர்கள் அதிகளவில் பாதிப்பு

பெருந்தோட்டத்துறையில் தற்பொழுது நிலவும் சுகாதார பிரச்சினைகள் காரணமாக பெருந் தொகையான பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதியமைச்சரும் முன்னாள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் தலைவருமான வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்தார்.

நுவரெலியா கொல்ப் கழக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பொழுது கூறினார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், பெருந்தோட்ட சுகாதார சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று பெருந்தோட்ட சுகாதார சேவைக்கென வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

தோட்ட நிர்வாகங்கள் பெருந்தோட்ட சுகாதாரத்துறையை பாராமரித்த போதிலும் முறையான சுகாதார சேவையை பெற்றுக்கொள்ள முடியாமல் தோட்டத்தொழிலாளர்கள் அவஸ்தைப்படுகின்றனர்.

நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுபினர் மயில்வாகனம் திலகராஜின் ஏற்பாட்டில் மனிதவள அபிவிருத்தி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோட்ட சுகாதார பணிப்பாளர் சால்ஸ் நுகேவெல மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் தலைவர் பி.சிவப்பிரகாசம் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் உட்பட சமுக ஆய்வாளர்களும் சமுக சேவையாளர்களும் சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

வீதி அபிவிருத்தித் திணைக்களம்

கிழக்கு மாகாணம்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக சீடா பதிவைக் கொண்டுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, திருகோணமலை, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதிபெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டும்.
3. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு ஒவ்வொரு விலைமனுவிற்காகவும் விலைமனுதாரர், முழு மதிப்பீட்டு ஆகு செலவு 5 மில்லியனிற்கு மேற்படும் போது மாத்திரம் ஏற்புடையதாகும். 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்தச் சட்டத்தின், 8ஆம் பந்தியின் கீழாக, கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு திருகோணமலை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திற்கு ரூ. 2000/- மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதன் மூலம், 2020.09.30 முதல் 2020.10.20 வரையான வேலை நாட்களில், 9.00 மணி முதல் 15.00 மணி வரை, திருகோணமலை, கிறீன் வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களினால் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
5. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் ஊடாக பெறுகை நடாத்தப்படும். இருந்தபோதிலும், இந்த பெறுகையின் மொத்த ஆகு செலவு மதிப்பீடு 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவானதால், பொது நிதியியல் சுற்று நிருப இல. 04/2016(II) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, பிரதேச முன்னுரிமை மற்றும் சீடா தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
6. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களுக்கு தேவையெனில் விலைனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் இலவசமாக அவற்றைப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் திருகோணமலை, கிறீன் வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிரதான பொறியியலாளரிடமிருந்து மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 026-2222767)
7. அனைத்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக பிரதான பொறியியலாளர் பெயரில் வரையப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டு 2020.10.21 அன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், திருகோணமலை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரிற்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவை மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பில் கலந்துகொள்ளலாம்.
    அ. முன்னோடி விலைமனுக் கூட்டம் கட்டாயமில்லை பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில், 2020.10.09 அன்று மு.ப. 10.00 மணிக்கு அது நடைபெறுவதுடன் அதில் விலைமனுதாரர்கள் கலந்துகொள்ள ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.
    ஆ. ஒப்பந்தம் கையளிப்பதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
    இ. விலைமனுப் பிணையானது, ரொக்கப்பணமாகவோ அல்லது அரச வங்கிப் பிணையாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது CGF பிணையாகவோ அல்லது காப்புறுதி பிணையாகவோ வழங்கப்படலாம்.

தொ. இல.	வேலையின் பெயர்	சீடா/ இக்டாட் தரம் (நெடுஞ்சாலை நிர்மாணிப்பு)	மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஆகு செலவு (மில்) (பெசேவ நீங்கலான)	ஒப்பந்த காலம்	விலைமனு செல்லுபடிக் காலம்	தேவைப்படும் விலைமனுப் பிணை	
						தொகை (ரூ)	செல்லுபடித் தன்மை (திறப்பு தினத்திலிருந்து)
01	திருகோணமலை D.S. பிரிவில் பலையூது வீதியின் (0+000 முதல் 1+700) பராமரிப்பு	C9 மற்றும் C8	0.69	45 நாட்கள்	49 நாட்கள்	10,405.00	77 நாட்கள் 2021.01.05
02	மூதூர் D.S. பிரிவில் பச்சனூர் பெருவெளி வீதியிலுள்ள (2.20 கிமீ) பெட்டி மதகின் மீள் நிர்மாணிப்பு	C9 மற்றும் C8	1.16	45 நாட்கள்	49 நாட்கள்	17,375.00	77 நாட்கள் 2021.01.05
03	கோமரன்கடவல D.S. பிரிவில் பன்குளம் - கிவுல்கடவல - திரியாய் வீதியின் பராமரிப்பு	C7 மற்றும் C6	5.51	45 நாட்கள்	77 நாட்கள்	82,750.00	105 நாட்கள் 2021.02.02
04	திருகோணமலை D.S பிரிவில் Orr's மேடு உள்ளக வீதிகளுக்கு எஷ்போல்ட் பதித்தல்	C8 மற்றும் C7	4.63	45 நாட்கள்	63 நாட்கள்	69,400.00	91 நாட்கள் 2021.01.19
05	மூதூர் D.S. பிரிவில் Foul Point வீதியைப் பழுதுபார்த்தல் மற்றும் மண் நிரப்பல்	C8 மற்றும் C7	4.63	45 நாட்கள்	63 நாட்கள்	69,445.00	91 நாட்கள் 2021.01.19
06	குச்சவெளி D.S. பிரிவில் குச்சவெளி கல்லம்பனத வீதியின் (0+000 - 9+650) பராமரிப்பு	C8 மற்றும் C7	4.58	45 நாட்கள்	63 நாட்கள்	68,750.00	91 நாட்கள் 2021.01.19
07	குச்சவெளி D.S. பிரிவில் அமரவயல் தென்னமரவடி வீதியின் (0+9.50 கிமீ) பராமரிப்பு	C8 மற்றும் C7	2.78	45 நாட்கள்	63 நாட்கள்	41,650.00	91 நாட்கள் 2021.01.19
08	திருகோணமலை D.S. பிரிவில் RDD உள்ளக வீதிகளுக்கு வீதி குறியீடுகளை இடல்	C8 மற்றும் C7	2.76	45 நாட்கள்	63 நாட்கள்	41,450.00	91 நாட்கள் 2021.01.19
09	திருகோணமலை D.S. பிரிவில் விஹாரை வீதியை அகலமாக்கல் மற்றும் எஷ்போல்ட் கொங்கிறீட் மேற்பரப்பிடல்	C7 மற்றும் C6	7.74	02 மாதங்கள்	77 நாட்கள்	116,175.00	105 நாட்கள் 2021.02.02
10	கொமரன்கடவல D.S. பிரிவிலுள்ள கண்டமலவ வீதிக்கு கொங்கிறீட் மேற் பரப்பிடல் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்	C7 மற்றும் C6	9.14	02 மாதங்கள்	77 நாட்கள்	137,120.00	105 நாட்கள் 2021.02.02
11	தம்பலகாமம் D.S. பிரிவில் முல்லிப் பொத்தானையை சென்றடையும் வீதிக்கான பக்கவடிகாலை நிர்மாணித்தல்.	C7 மற்றும் C6	9.12	02 மாதங்கள்	77 நாட்கள்	136,860.00	105 நாட்கள் 2021.02.02

குறிப்பு:- பதிவளிக்கும் கணிசமான விலைமனுதாரர்க்கு மேலேயுள்ள சீடா தரம் இல்லையெனில், விலைமனுதாரர்கள் கொண்டிருக்கும் உயர்த்தபட்ச சீடா தரம் கவனத்திற்கொள்ளப்படும்.

பொறியியலாளர் ஜீ சுகுமாரன்
தலைவர், பிராந்திய பொறுகைக் குழு,
வீதி அவிபிருத்தித் திணைக்களம்,
கிறீன் வீதி, திருகோணமலை.
தொலைபேசி: 026-2222767

திகதி:- 2020.09.30

பலாங்கொடை இராசகல பொது மலசலகூட வசதி

இன்மையால் பொதுமக்கள் அவதி

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை இராசகல சிறிய நகரத்தில் பொது மலசலகூட வசதி இன்மையால் பொதுமக்கள் பல கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளதாக பலாங்கொடை பிரதேசசபையின் உறுப்பினர் அருண சாந்த குணசேகர(ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

பலாங்கொடை பிரதேசசபையின் மாதாந்த கூட்டம் தலைவர் சுனில் பேமசிரி தலைமையில் இடம்பெற்றது.

இது சம்பந்தமாக சபையில் கருத்து தெரிவித்த பலாங்கொடை பிரதேசசபையின் முன்னாள் தலைவரும் தற்பொழுது சபை உறுப்பினராக உள்ள எம். பி. ரத்னசிறி(ஐக்கிய தேசியக் கட்சி) தெரிவித்ததாவது, இராசகல சிறிய நகரத்தில் முன்னர் மலசலகூட வசதி இருந்தபோதிலும் அப்பகுதி நபரொருவர் அந்த இடத்தை கைப்பற்றி வீடொன்றை நிர்மாணித்து உள்ளார்.

பலாங்கொடை பிரதேச சபையின் தலைவர் எம்.எம். சுனில் பேமசிரி(ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) குறிப்பிட்டதாவது இந்த நகரத்தை அபிவிருத்தி செய்ய தோட்ட நிர்வாகம் இடமளிப்பதில்லை. எனவே நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம்.நகரத்தில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள முடியாமை குறித்து வெட்கப்படுகின்றேன் என அவர் தெரிவித்தார்.

ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை, இரத்தொட்டை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த நபரொருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோ 980 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகள், 18 ஆயிரம் ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது வீட்டுக்குபொருத்தப்பட்டுள்ள சி.சி.டி. வி கேமராவை பயன்படுத்திஈ ஸி கேஷ் மூலம் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட முன்னாள் தலைவருமான கலாநிதி தீபிகாவுக்கு உடகம கண்டி வாழ் சிவில் அமைப்புக்களினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார். கண்டி லகூன் ஹோட்டலில் மனித உரிமை ஆணைக்குழுவின் கண்டி பிராந்திய இணைப்பாளர் குமுதினி விதானகே தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த கௌரவிப்பு விழாவுக்கு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் கண்டிமாவட்டத்தில் உள்ள சுமார் 15 இற்கும் மேற்பட்ட சிவில் அமைப்புக்களினது பிரதிநிதிகள், பேராசிரியர்கள் கல்விமான்கள் , சமூக நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். படம்: எம்.ஏ.அமீனுல்லா

பெறுகை அறிவித்தல்
மாநகர சபை – நீர்கொழும்பு

01. நீர்கொழும்பு மாநகர சபைக்குரிய புதிய பஸ் நிலைய கடைத் தொகுதியில் கீழே விபரிக்கப்பட்டுள்ள 14ஆம் இலக்க (தரை மாடி) கடையை 10 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக மாநகர ஆணையாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விஸ்தீரணம் சதுரஅடி	ஆகக் குறைந்த விலைமனு தொகை	மீளளிக்கப்படும் வைப்புத் தொகை	மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணம்
310.50	3,988,000.00	80,000.00	2,020.00

i. விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படுவது 2020.10.05 முதல் 2020.10.21 வரையான அரசாங்க வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் (வருமானம்) பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும்.

ii. விலைமனு விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுவது, 2020.10.05 முதல் 2020.10.22 மு.ப. 10.00 மணி வரையாகும்.

iii. விலைமனுக்கள் திறக்கப்படுவது, 2020.10.22 அன்று மு.ப. 10.30 மணிக்காகும்.

02. விலைமனுப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “கடையை குத்தகைக்கு விடல்” எனக் குறிப்பிட்டு அந்த விலைமனுப் பத்திரங்கள் 2020.10.05 முதல் 2020.10.22 அன்று மு.ப. 10.00 வரையான வாரத்தின் வேலை நாட்களில் மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ அல்லது மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை என்ற முகவரிக்கு குறித்த நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ வேண்டும்.

03. விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அல்லது உங்கள் பிரதிநிதியொருவருக்கு கலந்து கொள்ளலாம்.

04. இது தொடர்பாக மேலதிக விரபங்கள் தேவையெனில் அலுவலக நேரங்களில் 031-22819958 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பிரதான மாநகர கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05. அனைத்து விண்ணப்பங்களிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உரிய இடத்தில் பதியப்படல் வேண்டும்.

06. விலைமனுதாரரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முன்னர் விலைமனுதாரரின் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

07. கோரப்பட்டுள்ள விலைமனு நியதி மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக நன்கு புரிந்து கொண்டதன் பின்னர் விலைமனுதாரரினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அறிவூட்டப்படாமை விலைமனு பூர்த்தி செய்யப்படும் போது இழைக்கப்படும் தவறுகள் தொடர்பாக எக்காரணங்கொண்டும் எந்தவொரு கோரிக்கைகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

08. சபை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட விண்ணப்பங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், ஏனைய மாதிரிப் பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. விலைமனு கையளிப்பு முடிவடைந்ததன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் தவிர்ந்த ஏனைய விலைமனுதாரர்களின் பிணை வைப்பு மீளவும் செலுத்தப்படும்.

10. இந்த விலைமனுக் கோரல் மற்றும் பெறுகை தொடர்பாக மாநகர சபை கொண்டுள்ள தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

N.B.R.V. பெர்னாந்து
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை - நீர்கொழும்பு.

ஜா – எல பிரதேச சபை

2021.01.01 முதல் 2021.12.31 வரை ஜா-எல பிரதேச சபைக்கு உரித்தான இறைச்சிக்கடை ராகம வாரச்சந்தை, ராகம பொதுக் கழிவறைத் தொகுதி மற்றும் ராகம வாகனத் தரிப்பிடம் போன்றவற்றைக் குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக விமைனுக் கோரும் அறிவித்தல்

இப்பிரதேச சபை அதிகாரப் பிரிவிலுள்ள ராகம, மற்றும் கந்தான போன்ற உப அலுவலகப் பிரிவுகளில் உள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சபைக்குரித்தான இறைச்சிக்கடை, ராகம வாரச்சந்தை, ராகம பொதுக் கழிவறைத் தொகுதி மற்றும் ராகம வாகனத் தரிப்பிடம் குத்தகைக்கு விடுதல்களிற்காக (2021.01.01 முதல் 2021.12.31 வரை) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2020.10.23 அன்று மு.ப. 10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலைமனுப் படிவக் கட்டணமான ரூபா 5000.00 மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 இற்கான கட்டணமொன்றைச் செலுத்தி 2020.10.22 அன்று பி.ப. 3.00 வரை ஜா-எல பிரதேச சபையின் கந்தானையிலமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு முடிவுறும் என்பதுடன், பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் “மூலப்பிரதி” மற்றும் “நகல் பிரதி”யென தனித்தனியான உறைகளில் சேர்க்கப்பட்டு அவ்வுறைகளின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விமைனுவின் பெயர் குறிப்பிடப்பட்டு 2020.10.23 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் “செயலாளர், ஜா-எல பிரதேச சபை, கந்தனை” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்த்தல் முடியும்.

தாமதமாகும் அல்லது பூரணப்படுத்தப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். முழுமையான உரிமை ஜா-எல பிரதேச சபையின் தலைவருக்கு உரித்தாகும்.

விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் மற்றும் அனைத்து ஆலோசனைகளும் விலைமனுப் படிவங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களிற்காக

011-2239566
011-2232501

தலைவர்,
ஜா-எல பிரதேச சபை,
கந்தானை.

2020.09.21ஆம் திகதி
ஜா-எல பிரதேச சபை அலுவலகத்தில்.

அட்டவணை

தொடர் இலக்கம்	விபரம்	விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா	விலைமனுப் பிணைத் தொகை ரூபா	ஆகக் குறைந்த கேள்வி ரூபா
01	ராகம பொதுச் சந்தை இலக்கம் 01 ஆட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடை	5,000.00	31,500.00	630,000.00
02	ராகம பொதுச் சந்தை இலக்கம் 02 மாட்டிறைச்சிக் கடை	5,000.00	47,700.00	954,000.00
03	ராகம பொதுச் சந்தை இலக்கம் 03 பன்றி இறைச்சிக் கடை	5,000.00	28,600.00	572,000.00
04	கந்தான பொதுச் சந்தை இலக்கம் 01 மாட்டிறைச்சிக் கடை	5,000.00	50,000.00	1,000,000.00
05	கந்தான பொதுச் சந்தை இலக்கம் 03 மாட்டிறைச்சிக் கடை	5,000.00	21,500.00	430,000.00
06	ராகம பொதுக் கழிவறைத் தொகுதி	5,000.00	46,250.00	925,000.00
07	ராகம வாரச்சந்தை	5,000.00	55,500.00	1,110,000.00
08	ராகம வாகனத் தரிப்பிடம் (07 நாட்களிற்காக)	5,000.00	39,000.00	780,000.00
09	ராகம வாகனத் தரிப்பிடம் (05 நாட்களிற்காக)	5,000.00	18,000.00	360,000.00



BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு-10

வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2021ஆம் வருடம்

2021ஆம் வருடத்திற்காக பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள், கிராமோதய சபைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து இவ்வைத்தியசாலையின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அனைத்து விண்ணப்பங்களும் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு-10 எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) பொருட்கள் வழங்குதல்

1. கணனி, அச்சுப்பொறிகள், கணனி வலையமைப்பிற்கான துணைப்பாகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப்பாகங்கள்
2. மரம், உருக்கு மற்றும் MDFயினால் உற்பத்தி செய்யப்பட்ட வீட்டு உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
3. பெட் சைட் லொக்கர்கள், ஓவர் பெட் டேபள், சக்கர நாற்காலிகள், சேலைன் தாங்கிகள் மற்றும் அனைத்து வகையான ட்ரொலி வகைகள் உட்பட வைத்தியசாலை உபகரணங்கள்
4. இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள், ட்ரொலி மெத்தைகள் உட்பட அனைத்து வகையான மெத்தைகள்
5. அலுமினிய பிடிச்சட்டிகள் உட்பட அனைத்து விதமான அலுமினியம் மற்றும் உலோக உற்பத்திகள்
6. இரும்பு மற்றும் கல்வனைஸினால் தயாரிக்கப்பட்ட குப்பை கொண்டுபோகும் வண்டிகள் மற்றும் குப்பை கொண்டு போகும் வாளி போன்ற உற்பத்திகள்
7. அனைத்து வகையான டயர் மற்றும் டியூப்கள்
8. மின் கேத்தல், மின் கொதிகலன், கேத்தல் எலிமன்ட், கொதிகலன் எலிமன்ட், வெப்பச் சுருள் (ஹொட் பிளேட்) போன்ற மின் உபகரணங்கள்
9. குளிர்சாதனப் பெட்டிகள்
10. பணியாட் தொகுதியினர் சமையலறை மற்றும் பிரதான சமையலறைக்கு அவசியமான எரிவாயு அடுப்புகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
11. எலும்பியல் பண்டகசாலைக்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்கள்
12. கூரிய உபகரணங்களை வைப்பதற்குத் தேவையான உறைகள் மற்றும் சகல பிளாஸ்டிக் உறைகள்
13. காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
14. மருந்துகள் இடும் உறைகள் வழங்குதல்
15. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
16. அனைத்து வகையான துணிகள், மெகின்டோஸ் மற்றும் ரெக்சின் வகைகள்
17. அனைத்து வகையான மட்பாண்டப் பொருட்கள்.
18. தோல் மற்றும் தோல் சார்ந்த உற்பத்திகளான சப்பாத்து மற்றும் செருப்புகள் போன்றன
19. இரசாயனகூடத்திற்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு பிரிவிற்குத் தேவையான பாவனைப் பொருட்கள்
20. அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள், சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகள்
21. பாய், ஈர்க்கில், துடைப்பம், விளக்குமாறு, மொப், மலசலகூட பிரஷ்கள் போன்ற சுத்திகரிப்பு உபகரணங்கள்
22. அனைத்து வகையான சவர்க்காரம் மற்றும் சுத்திகரிப்புத் திரவங்கள்
23. துணி தைக்கும் நூல், நைலோன் நூல், இலாஸ்டிக், ரெப்லட் டேப், லினன் டேப் மற்றும் உருக்குக் கம்பிகள்
24. லெக்கர், வார்னிஷ், பொலிஷ், தரை மெருகூட்டும் பொருட்கள், மெதிலேடட் ஸ்பிரிட் மற்றும் வைன் ஸ்பிரிட் போன்ற உற்பத்திகள்
25. அனைத்து வகையான உலர் மின்கலங்கள் மற்றும் மீள்சக்தியேற்றக்கூடிய மின்கலங்கள் (வோட் 06, 12, 24)
26. சவர அலகை மாற்றக்கூடிய ரேசர்கள், ரேசர் பிளேட், தீப்பெட்டி, மெழுகுவர்த்திகள் மற்றும் பாரமான வேலைகளுக்கு உபயோகிக்கும் இறப்பர் கையுறைகள்
27. இயந்திரத்தால் துணி சலவை செய்வதற்குப் பாவிக்கும் இரசாயனப் பொருட்கள் (தூள் மற்றும் திரவம்) மற்றும் சலவை மற்றும் உலர்த்தும் இயந்திரங்களுக்கு பாவிக்கப்படும் பாவனைப் பொருட்கள் (பெடின், வெக்ஸ் போன்றன)
28. குப்பைகளை அப்புறப்படுத்துவதற்குப் பாவிக்கப்படும் பொலித்தீன் உறைகள் உட்பட பொலித்தீன் உற்பத்திகள்
29. அனைத்து வகையான கிருமிநாசினி வகைகள்
30. எல்.பி. கேஸ், கேஸ் ரெகியுலேட்டர்கள், பர்னர் மற்றும் கேஸ் குழாய்கள்
31. வளிச்சீராக்கி இயந்திரங்கள், காற்றமுத்தி இயந்திரம் உட்பட அதனைச் சார்ந்த உபகரணங்கள்
32. கூரை மின் விசிறிகள், நிலைநிறுத்தக்கூடிய மின்விசிறிகள் உட்பட அனைத்து மின் விசிறி வகைகள்
33. மின்சார மோட்டார் வகைகள், நீர்ப் பம்பிகள் உட்பட சார்புடைய உற்பத்திகள்
34. அனைத்து வகையான பெயாரிங் வகைகள் மற்றும் இயந்திரங்களுக்குத் தேவையான பெல்ட் வகைகள்
35. மின்சாரம், இயந்திரவியல் மற்றும் தச்சு வேலைக்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள்
36. தச்சுத் தொழில் பராமரிப்புக்குத் தேவையான மரக் குற்றிகள் மற்றும் பலகைகள்
37. சாவிகள், தகடுகள், பிணைச்சல்கள், கொக்கிகள், அலுமினியக் கதவுப் பிணைச்சல்கள், ரேலிங் ஆணிகள் உட்பட்ட கனரகப் பொருட்கள்.
38. அனைத்து வகையான நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
39. கெஸ்டர் சக்கரங்கள் உட்பட ட்ரொலிகளுக்குத் தேவையான அனைத்து வகை சக்கரங்கள்
40. ஒட்சிசன், அனைத்து வகையான அசட்லின் வகைகள், உருக்கியொட்டும் கம்பிகள் (மின்சார ஒட்டும் கம்பிகள் உட்பட)
41. அனைத்து வகையான மின் குமிழ்கள், மின் பிளக்குகள், சுவிச்சுகள், வயர்கள் உட்பட மின் சுற்றுக்குத் தேவையான அனைத்து வகையான மின் உபகரணங்கள்
42. சுவர் மற்றும் மரங்கள் உட்பட உருக்கு உபகரணங்களை மெருகூட்டுவதற்குப் பாவிக்கப்படும் பூச்சு வகைகள்
43. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் வாயு சிலிண்டர்கள்

(ஆ) வழங்கல் மற்றும் சேவைகள்

01. அனைத்து வகையான தையல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
02. அனைத்து வகையான அச்சு வேலைகள்
03. அனைத்து வகையான கதிரியக்க மற்றும் ஆய்வுகூட பரிசோதனை வேலைகள்
04. E.O. Gas தொற்றுநீக்கும் வேலைகள் (Ethylene Oxide)
05. உரிமை கோரப்படாத சடலங்களை அப்புறப்படுத்துதல்
06. வைத்தியசாலை துணிகளைத் தைத்தல் (வைத்தியசாலையினால் வழங்கப்படும் துணிகள்)
07. சத்திரசிகிச்சையகம், இரசாயன ஆய்வுகூடம், கதிரியல் பிரிவு, உடற்பயிற்சி சிகிச்சைப் பிரிவு உட்பட வைத்தியசாலையினுள் பாவிக்கப்படும் அனைத்து மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள்
08. உள்ளக தொலைபேசி சேவைகளை நிறுவுதல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
09. வாயு அடுப்புகள் / ஒட்சிசன் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவை மற்றும் பராமரிப்பு
10. கணனி, தொலைக்காட்சிப் பெட்டி, பல்லூடக இயந்திரங்களின் திருத்தவேலைகள்
11. மருத்துவ வாயு முறைமை சேவை மற்றும் பராமரிப்பு
12. இறப்பர் முத்திரைகள் மற்றும் பொலிமர் முத்திரைகளைத் தயாரித்தல்
13. பிளாஸ்டிக் மற்றும் க்ளடின் பெயர்ப் பலகைகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
14. பொதுமக்கள் தொடர்பு வழங்குதல், பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல்
15. C.C.T.V. முறைமையை வழங்குதல், பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல்
16. Counter Numbering Display வழங்குதல், பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல்
17. மின் சலவை இயந்திர திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல் மற்றும் ஆவி கொதிகலன் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகள்
18. வாகன திருத்தவேலைகள் செய்தல் (மின்சார முறைமை திருத்தவேலை மற்றும் குஷன் செய்தல் உட்பட)
19. கதிரை பின்னுதல், நிறப்பூச்சு பூசுதல், பொலிஸ் பண்ணுதல், குஷன் இடுதல், ரெக்சின் இடுதல் மற்றும் போர்மிகா இடுதல்
20. குளிர்சாதனப்பெட்டி திருத்தவேலைகள்
21. அனைத்து வகையான மின்சார மோட்டார்கள், ட்ரான்ஸ்போமர்கள், மின்விசிறிகள் போன்றவற்றின் திருத்தவேலைகள்
22. நீர்ப் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
23. சோறு சமைக்கும் மின் கொதிகலன், மரக்கறிகளை சுத்திகரிக்கும் இயந்திரம், பாரிய அளவிலான சுடுநீர் கொதிகலன் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
24. சடல அறையின் வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் சடலங்களை வைக்கும் செருகுப் பெட்டிகளின் திருத்தவேலைகள் செய்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
25. வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள், வேன், பஸ் போன்றவைகளை வழங்குதல்
26. வைபவ வேலைகளுக்கான உணவு, பானம் மற்றும் சேவைகள் போன்றவைகளை வழங்குதல்
27. பூச்சிக் கட்டுப்பாட்டுச் சேவைகள் (கறையான், மூட்டைப் பூச்சிகள் போன்றன)
28. வைத்தியாசாலையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள், துணி வகைகள், செருப்பு, சப்பாத்துகளை எடுத்துச் சென்று எரித்து அழித்துவிடல்.

03. அந்தந்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக பின்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய வெவ்வேறு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவ வழங்கல்கள் தொடர்பில் வழங்கும் நிறுவனங்களுக்கு விசேடமான பொருட்கள் தொடர்பிலான வகைப்படுத்தலை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (உ+ம்: Sutures, Laparoscopy Instruments, Orthopedic items, Urology items)

வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

01. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி:
02. பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் வழங்கல் மற்றும் சேவை மற்றும் உருப்படி இலக்கம்: (ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
03. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி:
04. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:
(பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
05. வெட் இலக்கம்:
06. தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்:
07. 2020ஆம் வருடத்தில் இவ்வாறான சேவை வழங்கப்பட்டுள்ளதா?:
08. இந்த நிறுவனத்திற்கு கடன் வசதிகள் வழங்குவதற்கான நிபந்தனைகள்:
09. பற்றுச்சீட்டின் இலக்கம்:

திகதி:...............................

....
பணிப்பாளர் / முகாமையாளர்

மேலும் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபாவை வெவ்வேறாக ஒவ்வொரு பொருள் மற்றும் சேவையின் பொருட்டும் செலுத்துதல் வேண்டும். மேற்படி கொடுப்பனவுகளை இவ்வலுவலகத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பதிவு செய்து கொள்ளும் ஒவ்வொரு விடயத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோருவதற்கான உரிமையை வைத்தியசாலை கொண்டுள்ளது. உரிய தரம் மற்றும் மாதிரிக்கமைவாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் மற்றும் ஒப்பந்தத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

05. அனைத்து விண்ணப்பங்களும் 2020-10-30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. எவ்விதக் காரணமும் காட்டாமல் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் / நிராகரிக்கும் அதிகாரத்தை கொழும்பு-10, இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

வைத்தியர் டபிள்யூ. கே. விக்கிரமசிங்க,
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
இலங்கை தேசிய வைத்தியசாலை,
கொழும்பு 10.

தினகரன்
விளையாட்டு
2020 ஒக்டோபர் 1 வியாழக்கிழமை
sports.tkn@lakehouse.lk

லங்கா பிரீமியர் லீக் தொடர் ஒத்திவைப்பு

லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேயாஸ் அய்யருக்கு 12 இலட்சம் அபராதம்

மெதுவாக பந்துவீசியதற்காக டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் அய்யருக்கு இந்திய மதிப்பில் 12 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் – டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தியது.

இந்த போட்டியில் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி பந்துவீச நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்துக்கொண்டது. மெதுவாக பந்து வீசியதற்காக டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் அய்யருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த பருவகாலத்தில் டெல்லி அணி செய்யும் முதல் தவறு என்பதால் அணியின் தலைவருக்கு 12 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக ஐபிஎல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகளுடனான கிரிக்கெட் தொடரை ஆரம்பிக்கும் நியூசிலாந்து

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, தங்களுடைய இந்த பருவகாலத்துக்கான கிரிக்கெட் தொடர்களை எதிர்வரும் நவம்பர் 21ம் திகதி மேற்கிந்திய தீவுகளுடனான தொடருடன் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த பருவகாலத்துக்கான போட்டித் தொடர், மேற்கிந்திய தீவுகளுடன் ஆரம்பிக்கப்படும் நிலையில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் அடுத்தடுத்த மாதங்களில் நியூசிலாந்துக்கு செல்லவுள்ளன. ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான தலா 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடவுள்ளதுடன், அவுஸ்திரேலிய அணி T20I போட்டிகளில் மாத்திரம் விளையாடவுள்ளது.

நியூசிலாந்துக்கு முதலில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் மேற்கிந்திய தீவுகள் அணி 3 T20I போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளதுடன், பாகிஸ்தான் அணி டிசம்பரில் 3 T20 போட்டிகளில் விளையாடுவதுடன், பொக்சிங் தினத்தில் டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கிறது.

பின்னர் நியூசிலாந்து அணி, தங்களுடைய இந்த பருவகாலத்தில் எதிர்வரும் பெப்ரவரி 21 முதல் மார்ச் 7ம் திகதிவரை அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 5 T20I போட்டிகளில் விளையாடவுள்ளதுடன், பங்களாதேஷ் அணி மார்ச் 13ம் திகதியிலிருந்து மூன்று ஒருநாள் மற்றும் மூன்று T20I போட்டிகளுக்காக நியூசிலாந்து செல்கிறது.

குறித்த இந்த தொடர்கள் தொடர்பில் அறிவித்த நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் வைட், “இந்த தொடர்களை நடத்துவதற்கு இரண்டு காரணங்கள் முக்கியமானவை. நியூசிலாந்து கிரிக்கெட்டுக்கான நிதியினை திரட்டிக்கொள்ள வேண்டும். அதேநேரம், கடினமான காலப்பகுதியிலும் கிரிக்கெட்டின் மீது பற்றுக்கொண்டுள்ள ரசிகர்களுக்காக போட்டிகள் நடத்தப்பட வேண்டும்” என்றார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரொன்றுக்கு தயாராகிவரும் அவுஸ்திரேலிய அணி, அதே காலப்பகுதியில் நியூசிலாந்துக்கு T20I அணியொன்றை அனுப்புவதற்கு ஒப்புக்கொண்டமைக்கு டேவிட் வைட் தன்னுடைய நன்றிகளை தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து டெஸ்ட் அணி இந்த ஆண்டு மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் விளையாடவுள்ளதுடன், அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் எதிர்வரும் ஆண்டு விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

42வது ஒப்சவர்–மொபிடெல்
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ....
வாக்களித்தவர் பெயர் : ....
முகவரி : ....
மொபைல் இல. : ....

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-03
இல. 30

UNLIMITED
YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம்
ரூ.249+வரிகள்
அழையுங்கள் #170#
4G LTE
Sri Lanka Telecom
Mobitel

சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்:

சம்பியனானது பவர் பிளேயர்ஸ் 96 அணி

கல்முனை மத்திய, சாய்ந்தமருது தினகரன் நிருபர்கள், யு.கே.காலிதீன்

சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்2020 சம்பியனாக பவர் பிளேயர்ஸ் 96 அணியினர் வெற்றி வாகை சூடினர்.

சுப்பர் ஹூரோஸ் 97 அணியினரின் ஏற்பாட்டில் விளையாட்டு உத்தியோகஸ்தர் ஏ.முஹம்மட் றஸூனின் வழி நடாத்தலில் சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்2020 சுற்றுப்போட்டி அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியாக தாய்ப் பாடசாலையான கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மைதானத்தில் சனி, ஞாயிறு (26,27) தினங்களில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் பவர் பிளேயர்ஸ் 96, சுப்பர் ஹூரோஸ் 97, ஸஹ்றியன் 90, ஸஹ்றியன் 95 ஆகிய அணிகள் மோதின. இதில் இறுதிப்போட்டிக்கு பவர் பிளேயர்ஸ் 96 மற்றும் ஸஹ்றியன் 95 அணிகள் தெரிவாகின.

இதன் அடிப்படையில் (27) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸஹ்றியன் 95 அணி பவர் பிளேயர்ஸ் 96 அணியினரை துடுப்பெடுத்தாட பணித்ததற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் பிளேயர்ஸ் 96 அணியினர்

10 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். இவ்வணியில் அதிகூடிய ஓட்டமாக றிபாய் காரியப்பர் 10 பந்துகளுக்கு 25 ஓட்டங்களையும், நஜாத் 13 பந்துகளுக்கு 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸஹ்றியன் 95 அணியினர் 9.5 பந்துவீச்சு ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வி கண்டனர். இதனடிப்படையில் 55 ஓட்டங்களால் பவர் பிளேயர்ஸ் 96 வெற்றி பெற்று சம்பியனாக தெரிவாகினர்.

இச்சுற்றுப் போட்டித் தொடர் ஆட்ட நாயகனாக (மேன் ஒப் த சீரிஸ்) பவர் பிளேயர்ஸ் 96 அணியின் றிபாய் மற்றும் இறுதிப் போட்டி ஆட்ட நாயகனாக றிபாய் காரியப்பர் ஆகியோர் தெரிவானார்கள்.

இவ்விறுதிப் போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஜாபீர் பிரதம அதிதியாகவும், ஓய்வு பெற்ற விளையாட்டு அதிகாரி முஹம்மட் நபார் மற்றும் பொறியியலாளர் ஜெசீல் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்ததுடன் வெற்றிக்கிண்ணங்களையும் வழங்கி வைத்தனர்.

கோட்டமுனை மகளிர் அணி மண்முனை வடக்கு பிரதேச கரப்பந்தாட்ட சம்பியனாக தெரிவு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

32 வது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் மண்முனைவடக்கு பிரதேச கரப்பந்தாட்ட மகளிர் போட்டியில் கோட்டமுனை இளைஞர் கழக மகளிர் அணி மண்முனை வடக்கு பிரதேச கரப்பந்தாட்ட சம்பியன் அணியாக தெரிவானது.

மட்டக்களப்பு வெட்டுக்காடு எவர்சைன் மைதானத்தில் நடைபெற்றது.மண்முனைவடக்கு பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி ரமணன் பிரவீன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வினை இளைஞர் பாராளுமன்றத்தின் மண்முனைவடக்கு பிரதேச உறுப்பினரும்சுற்றுலாத்துறை மற்றும் விமானபோக்குவரத்து பிரதி அமைச்சருமான எஸ்.சஜித் சம்பிரதாயபூர்மாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மண்முனைவடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் இமானுவேல் செந்தூரன் மற்றும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உறுப்பினர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

15 இளைஞர் கழக மகளிர் அணிகள் பங்குகொண்ட இப்போட்டியின் இறுதிப் போட்டியில் புதுநகர் நியூ பிரன்ஸ் இளைஞர் கழக மகளிர் அணியும் கோட்ட முனை மகளிர் அணியும்மோதிக்கொண்டன.

இதில் கோட்டமுனை மகளிர் அணியும் 20 க்கு 25 என்ற அடிப்படையில் 05 மேலதிக புள்ளிகளால் இவ்வாண்டுக்கான மண்முனை வடக்கு பிரதேச சம்பியன் அணியாகத் தெரிவானது. இந்த அணியின் சுகிர்தன் நிலுக்ஷிகா 09 அதிக புள்ளிகளைப் பெற்று கொடுத்து தனது அணிக்கு வெற்றியை தேடிக்கொடுத்தார்.

கடற்கரை கரப்பந்து சுற்றுப்போட்டி

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் சம்பியன்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட, பிரதேச செயலகங்களுக்கிடையிலான கடற்கரை கரப்பந்து சுற்றுப்போட்டியில், அக்கரைப்பற்று பிரதேச செயலகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. சாய்ந்தமருது பிரதேச செயலகம் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவசார அமைச்சின் கீழுள்ள, தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படவுள்ள 32வது தேசியமட்ட விளையாட்டு விழாவை முன்னிட்டு, அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி காரைதீவு கடற்கரையில் நடைபெற்றது.

கடற்கரை கரப்பந்து சுற்றுப் போட்டியில் 10 பிரதேச செயலகங்கள் பங்குபற்றின. அக்கரைப்பற்று மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று அணி சம்பியனாகத் தெரிவானது.

இதன்மூலம் அக்கரைப்பற்று பிரதேச செயலகம் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி சமீலுல் இலாஹி தெரிவித்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் இறுதிப் போட்டியில் கலந்து சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.